# TAMIL SONGS

## 101. அடைக்கலமே உமதடிமை நானே

அடைக்கலமே உமதடிமை நானே
ஆர்ப்பரிப்பனே அக மகிழ்ந்தே
கர்த்தர் நீர் செய்த நன்மைகளையே
நித்தம் நினைத்து துதிப்பேனே

அளவற்ற அன்பினால் அணைத்தவரே
எண்ணற்ற நன்மையால் நிறைத்தவரே
மாசில்லாத நேசரே மகிமைப் பிரதாபா
பாசத்தால் உம்பாதம் பற்றிடுவேனே

என்னை என்றும் போதித்து நடத்துபவரே
கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுபவரே
நடக்கும் வழிதனைக் காட்டுபவரே
நம்பி வந்தோனை கிருபை சூழ்ந்து கொள்ளுதே

கரம் பற்றி நடத்தும் கர்த்தர் நீரல்லோ
கூப்பிட்ட என்னை குணமாக்கினீரல்லோ
குழியில் விழாதபடி காத்துக்கொண்டீரே
அழுகையைக் களிப்பாகமாற்றி விட்டீரே

## 102. அல்லே யா கர்த்தரையே

அல்லே யா கர்த்தரையே
ஏகமாய் துதியுங்கள்
அவர் நடத்தும் செயல்களெல்லாம்
பார்த்தோரே துதியுங்கள்
வல்லமையாய் கிரியை செய்யும்
வல்லோரை துதியுங்கள்
எல்லோரையும் ஏற்றுக் கொள்ளும்
இயேசுவை துதியுங்கள்

இராஜாதி ராஜனாம் இயேசுராஜன்
பூமியில் ஆட்சி செய்வார்
அல்லேலூயா, அல்லேலூயா
தேவனை துதியுங்கள்

தம்பூரோடும், வீணையோடும்
தேவனை துதியுங்கள்
ரத்தத்தினால் பாவங்களை
போக்கினார் துதியுங்கள்
எக்காளமும் கைத்தாளமும்
முழங்கிட துதியுங்கள்
எக்காலமும் மாறாதவர்
இயேசுவை துதியுங்கள்

சூரியனே, சந்திரனே
தேவனை துதியுங்கள்
ஒளியதனை எங்கள் உள்ளம்
அளித்தோரை துதியுங்கள்

அக்கினியே கல்மழையே
படைத்தோரை துதியுங்கள்
அக்கினியாய் கல்மனதை
உடைப்போரை துதியுங்கள்

பிள்ளைகளே, வாலிபரே
தேவனை துதியுங்கள்
வாழ்வதனை அவர் பணிக்கே
கொடுத்து நீர் துதியுங்கள்
பெரியவரே, பிரபுக்களே
தேவனை துதியுங்கள்
செல்வங்களை இயேசுவுக்காய்
செலுத்தியே துதியுங்கள்

## 103. அப்பா வீட்டில் எப்போதும்

அப்பா வீடடில் எப்போதும் சந்தோஷமே
ஆடலும் பாடலும் இஞ்கு தானே

ஆடுவோம், கொண்டாடுவோம்
பாடுவோம் நடனமாடுவோம்
அல்லே யா ஆனந்தமே
எல்லையில்லா பேரின்பமே

காத்திருந்தார் கண்டு கொண்டார்
கண்ணீரெல்லாம் துடைத்துவிட்டார்

பரிசுத்த முத்தம் தந்து
பாவமெல்லாம் போக்கிவிட்டார்

பாவத்திலே மரித்திருந்தேன்
புதிய மனிதனாய் உயிர்த்துவிட்டேன்

ஆவியென்னும் ஆடை தந்தார்
ஆதிகாரம் என்னும் மோதிரம் தந்தார்

வசனமென்னும் சத்துணவை
வாழ்நாளெல்லாம் ஊட்டுகிறார்

அணிந்து கொண்டோம் மிதியடியை
அப்பாவின் சுவிசேஷம் அறிவித்திட

## 104. அற்புதர்

அற்புதர் (4) இயேசு அற்புதர்
அண்டினோர் வாழ்வை இன்பமாய் மாற்றும்
இயேசு அற்புதர்

எல்லோரும் பாடுங்கள் கைத்தாளம் போடுங்கள்
சந்தோஷத்துடனே சங்கீதம் பாடுங்கள்

எத்தனை துன்பங்கள் நம்மில் வந்தபோதும்
தீர்த்த இயேசு அற்புதர்
என்னென்ன தொல்லைகள் நம்மை சூழ்ந்தபோதும்
காத்த இயேசு அற்புதர்

உலகத்திலிருப்போரிலும் எங்கள்
இயேசு பெரியவர் அற்புதரே
உண்மையாய் அவரைத் தேடும் யாவருக்கும்
இயேசு அற்புதரே

அலை கடல் மேலே நடந்தவர்
எங்கள் இயேசு அற்புதர்
அகோர காற்றையும் அமைதிப்படுத்திய
இயேசு அற்புதா

அறைந்தனர் சிலுவையிலே
ஆண்டவர் மரித்தார் அந்நாளினிலே
ஆகிலும் மூன்றாம் நாள் உயிருடன்
எழுந்த இயேசு அற்புதரே

## 105. அன்பு கூருவேன்

அன்பு கூருவேன் இன்னும் அதிகமாய்
ஆராதிப்பேன் இன்னும் ஆர்வமாய்

முழு உள்ளத்தோடு ஆராதிப்பேன்
முழு பெலத்தோடு அன்பு கூருவேன்
ஆராதனை ஆராதனை(4)

எபிநேசரே எபிநேசரே
இதுவரையில் உதவினீரே
இதுவரையில் உதவினீரே – உம்மை

எல்ரோயீ எல்ரோயீ
என்னைக் கண்டீரே நன்றி ஐயா
என்னைக் கண்டீரே நன்றி ஐயா – உம்மை

யேகோவா ராப்பா யேகோவா ராப்பா
சுகம் தந்தீரே நன்றி ஐயா

சுகம் தந்தீரே நன்றி ஐயா – உம்மை

## 106. அனாதி தேவன்

அனாதி தேவன் உன் அடைக்கலமே
அவர் நித்திய புயங்கள் உன் ஆதாரமே.

இந்த தேவன் என்றென்றுமுள்ள
சதா காலமும் நமது தேவன்
மரணபரியந்தம் நம்மை நடத்திடுவார்.

காருண்யத்தாலே இழுத்துக்கொண்டார்
தூய தேவ அன்பே
இவ்வனாந்திரத்தில் நயங்காட்டி உன்னை
இனிதாய் வருந்தி அழைத்தார்

கானகப் பாதை காரிருளில்
தூயதேவ ஒளியே
அழுகை நிறைந்த பள்ளத்தாக்குகளை
அரும்நீருற்றாய் மாற்றினாரே

கிருபை கூர்ந்து மனதுருகும்
தூய தேவ அன்பே உன் சமாதானத்தின்
உடன்படிக்கைதனை உண்மையாய்
கர்த்தர் காத்துக்கொள்வார்

## 107. அவர் எந்தன் சங்கீதமானவர்

அவர் எந்தன் சங்கீதமானவர்
பெலமுள்ள கோட்டையுமாம்
ஜீவனின் அதிபதியான அவரை
ஜீவிய காலமெல்லாம் வாழ்த்திடுவோம்

துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூதர் கணங்கள் போற்றும் தேவன் அவரே
வேண்டிடும் பக்தர்களின் குறைகள் கேட்கும்
தீக்கற்றப் பிள்ளைகளின் தேவன் அவரே

இரண்டு மூன்று பேர் எந்தன் நாமத்தினால்
இருதயம் ஒருமித்தால் அவர் நடுவில்
இருப்பேன் என்றவர் நமது தேவன்
இருகரம் கூப்பி என்றும் வாழ்த்திடுவோம்

வானவர் கிறிஸ்தேசு நாமம் அதை
வாழ்நாள் முழுவதும் வாழ்த்திடுவோம்
வருகையில் அவரோடு இணைந்து என்றும்
வணங்குவோம் வாழ்த்துவோம் போற்றிடுவோம்

## 108. ஆத்துமமே, என் முழு உள்ளமே

ஆத்துமமே, என் முழு உள்ளமே, – உன்
ஆண்டவரைத் தொழுதேத்து
இந்நாள் வரைஅன்பு வைத் தாதரித்த
ஆண்டவரைத் தொழுதேத்து

போற்றிடும் வானோர், பூதலத்துள்ளோர்
சாற்றுதற் கரிய தன்மையுள்ள

தலைமுறை தலைமுறை தாங்கும் விநோதா
உலக முன் தோன்றி ஒழியாத

தினம் தினம் உலகில் நீ செய் பலவான
வினை பொறுத் தருளும், மேலான

வாதை, நோய், துன்பம் மாற்றி, அனந்த
ஓதரும் தயை செய் துயிர் தந்த

உற்றுனக் கிரங்கி உரிமை பாராட்டும்
முற்றும் கிருபையினால் முடி சூட்டும்

## 109. ஆதாரம் நீர் தான் அய்யா

ஆதாரம் நீர் தான் அய்யா (2)
காலஙுஞ்கள் மாற கவலைகள் தீர

ஆதாரம் நீர் தான் அய்யா (2)

உலகத்தில் என்னென்ன ஜெயஙஂகள்
கண்டேன் நான் இந்நாள்வரை (2)
ஆனாலும் ஏனோ நிம்மதியில்லை
குழப்பஙஂகள் நிறைகின்றன

குடும்பத்தில் குழப்பஙஂகள் இல்லை
பணக்கஷ்டம் ஒன்றுமே இல்லை (2)
ஆனாலும் ஏனோ நிம்மதியில்லை
அமைதிதான் கலைகின்றது

உந்தனின் சாட்சியாய் வாழ
உள்ளத்தில் வெகுநாளாய் ஆசை (2)
உம்மிடம் வந்தேன். உள்ளத்தை தந்தேன்
சாட்சியாய் வாழ்ந்திடுவேன்

## 110. ஆசீர்வதியும் கர்த்தரே

ஆசீர்வதியும் கர்த்தரே, ஆனந்தமிகவே
நேசா உதியும் சுத்தரே, நித்தம் மகிழவே

வீசிரோ வானஜோதி கதிரிங்கே
மேசியா எம்மணவாளனே
ஆசாரியரும் வான் ராஜனும் ஆசீர்வதித்திடும்.

இம்மண மக்களோடுமே என்றென்றும் தங்கிடும்
உம்மையே கண்டும் பின்சென்றும். ஓங்கச் செய்தருளும்
இம்மையே மோட்சமாக்கும் வல்லவரே இன்பத்தோடன் பாக்கி சூட்சமே
உம்மிலே தங்கித் தரிசிக்க ஊக்கமருளுமே

ஒற்றுமையாக்கும் இவரை ஊடாக நீர் நின்றே
பற்றோடும் மீது சாய்ந்துமே பாரில் வசிக்கவே
வெற்றி பெற்றோங்கும் இவர் நெஞ்த்திலே
வீற்றாளும் நீர் ஏக ராஜனும்
உற்றவான் ராயர் சேயர்க்கே ஒப்பாய் ஒழுகவே

பூதல ஆசீர்வாதத்தால் பூரணமாகவே
ஆதரித்தாளும் கர்த்தரே ஆசீர்வதித்திடும்
மா திரளாக இவர் சந்ததியார்
வந்துதித்தும்மை பிரஸ்தாபிக்க
ஆ தேவ கிருபை தீர்மானம் ஆம் போல் அருளுமே

## 111. ஆயிரம் ஆயிரம்

ஆயிரம் ஆயிரம் பாடல்களை
ஆவியில் மகிழ்ந்தே பாடுங்களே
யாவரும் தேமொழிப் பாடல்களால்
இயேசுவைப் பாடிட வாருங்களே

அல்லேலூயா அல்லேலூயா
என்றெல்லாரும் பாடிடுவோம்
அல்லல் இல்லை அல்லல் இல்லை
ஆனந்தமாய் பாடிடுவோம்

புதிய புதிய பாடல்களைப்
புனைந்தே பண்களும் சேருங்களேன்
துதிகள் நிறையும் கானங்களால்
தொழுதே இறைவனைக் காணுங்களே

நெஞ்சின் நாவின் நாதங்களே
நன்றி கூறும் கீதங்களாம்
மிஞ்சும் ஓசைத் தாளங்களால்
மேலும் பரவசம் நாடுங்களே

எந்த நாளும் காலங்களும்
இறைவனைப் போற்றும் நேரங்களே
சிந்தை குளிர்ந்தே ஆண்டுகளாய்
சீயோனின் கீதம் பாடுங்களே

## 112. ஆராதனை நாயகன் நீரே

ஆராதனை நாயகன் நீரே
ஆராதனை வேந்தனும் நீரே

ஆயுள் முடியும் வரை
உம்மை தொழுதிடுவேன்

ஆயிரம் பேர்களில் சிறந்தோர்
ஆண்டவர் இயேசு நீரே
விடிவெள்ளியே எந்தன் பிரியும் நீரே
என்றென்றும் வாழ்ந்திடுவேன்

மாந்தர்கள் போற்றிடும் தெய்வம்
மகிமையின் தேவன் நீரே
முழஙீ்கால் யாவுமே முடஙீ்கிடுமே
மகிழ்வுடன் துதித்திடுவேன்

முடிவில்லா ராஜ்யம் அருள
திரும்பவும் வருவேன் என்றீர்
ஆயத்தமாய் நான் சேர்ந்திடவே
அனுதினம் வணஙீ்கிடுவேன்

### 113. ஆராதிப்பேன்

ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன்
ஆண்டவர் இயேசுவை ஆராதிப்பேன்

வல்லவரே உம்மை ஆராதிப்பேன்
நல்லவரே உம்மை  ஆராதிப்பேன்

பரிசுத்த உள்ளத்தோடு ஆராதிப்பேன்
பணிந்து குனிந்து ஆராதிப்பேன.

ஆவியிலே உம்மை ஆராதிப்பேன்
உண்மையிலே உம்மை ஆராதிப்பேன்

தூதர்களோடு ஆராதிப்பேன்
ஸ்தோத்திர பலியோடு ஆராதிப்பேன்

### 114. ஆனந்தமாய் நாமே

ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே
அருமையாய் இயேசு நமக்களித்த
அளவில்லாக் கிருபை பெரிதல்லவோ
அனுதின ஜீவியத்தில்

ஆத்துமமே என் முழு உள்ளமே
உன் அற்புத தேவனையே ஸ்தோத்தரி
பொங்கிடுதே என் உள்ளத்திலே
பேரன்பின் பெரு வெள்ளமே

கருணையாய் இதுவரை கைவிடாமலே
கண்மணிபோல் எம்மைக் காத்தாரே
கவலைகள் போக்கிக் கண்ணீர் துடைத்தார்
கருத்துடன் பாடிடுவோம்

படகிலே படுத்து உறங்கினாலும்
கடும் புயல் அடித்துக் கவிழ்ந்தாலும்
கடலையும் காற்றையும் அமர்த்தி எம்மைக் காத்தாரே அல்லேலுயா

யோர்தானைக் கடந்தோம் அவர் பெலத்தால்
எரிகோவைத் தகர்த்தோம் அவர் துதியால்
இயேசுவின் நாமத்தில் ஜெயம் எடுத்தே
என்றென்றுமாய் வாழுவோம்

## 115. இதோ மனுஷரின் மத்தியில்

இதோ மனுஷரின் மத்தியில் தேவாதி
தேவனே வாசம் செய்கிறாரே

தேவ ஆலயமும் அவரே
தூய ஒளி விளக்கும் அவரே
ஜீவனாலே தம் ஜனங்களின் தாகம் தீர்க்கும்
சுத்த ஜீவ நதியும் அவரே

மகிமை நிறை பூரணமே
மகா பரிசுத்த ஸ்தலமதுவே
என்றும் துதியுடனே அதன் வாசல் உள்ளே

எங்கள் பாதங்கள் நிற்கிறதே

சீயோனே உன் வாசல்களை
ஜீவ தேவனே நேசிக்கிறார்
சீர்மிகுந்திடும் இச் சுவிசேஷந்தனை
கூறி உயர்த்திடுவோம் உமையே

## 116. இயேசுவின் குடும்பம்

இயேசுவின் குடும்பம் ஒன்று உண்டு
அன்பு நிறைந்திடும் இடம் உண்டு

உயர்வுமில்லை அங்கு தாழ்வு மில்லை
ஏழையில்லை பணக்காரன் இல்லை
இராஜாதி இராஜா இயேசு
என்றென்றும் ஆண்டிடுவார்

பாவமில்லை அங்கு சாபமில்லை
வியாதியில்லை கடும் பசியுமில்லை
இராஜாதி இராஜா இயேசு
என்றென்றும் காத்திடுவார்

இன்பமுண்டு சமாதான முண்டு
வெற்றி உண்டு துதி பாடல் உண்டு
இராஜாதி இராஜா இயேசு
என்றென்றும் ஈந்திடுவார்

## 117. இயேசுவின் சீஷர்கள் நாம்

இயேசுவின் சீஷர்கள் நாம்
சீஷர்களை உருவாக்குவோம்
நம் தேவன் என்றென்றுமாய்
நம்மோடு கூட இருப்பார்

ஒருவரில் ஒருவர் நாமெல்லாம்
அன்பு செய்வோம்
இயேசு போல் அன்பு செய்வோம்

மெய்யான சீஷராவோம்
வார்த்தையில் நிலைத்திருப்போம்
மெய்யான சீஷராவோம்
சத்தியத்தை அறிவோம்
விடுதலை பெறுவோம்

நம்மை நாமே வெறுப்போம்
சிலுவையை சுமப்போம்
அனுதினமும் சுமப்போம்
இயேசுவின் பின்செல்லுவோம்

## 118. இயேசுவின் நாமம்

இயேசுவின் நாமம் இனிதான நாமம்
இணையில்லா நாமம் இன்ப நாமம்

பாவத்தைப் போக்கும் பயமதை நீக்கும்
பரம சந்தோஷம் பக்தருக்களிக்கும்

பரிமள தைளமாம் இயேசுவின் நாமம்
பார் எங்கும் வாசனை வீசிடும் நாமம்

வானிலும் பூவிலும் மேலான நாமம்
வானாதி வானவர் இயேசுவின் நாமம்

முழங்கால் யாவும் முடக்கிடும் நாமம்
மூன்றில் ஒன்றாக ஜொலிப்பவர் நாமம்

சாத்தானின் சேனையை ஜெயித்திட்ட நாமம்
சாப பிசாசை துரத்திடும் நாமம்

## 119. இயேசுவை போல் நல்ல

இயேசுவைப் போல் நல்ல மீட்பருண்டோ ?
இல்லையே இல்லையே
ஆத்தம நோய் தீர்க்கும் வைத்யருண்டோ ?
இல்லையே இல்லையே

இயேசுநேசர் அறிவார் என்னை
என்றும் என்னோடிருப்பாரே
இயேசுவைப் போல் நல்ல நேசரில்லை
இல்லையே இல்லையே

இயேசையர் மேன்மைக்கோர் நிகருண்டோ ?
இல்லையே இல்லையே
இராஜரின் தாழ்மைக்கோர் ஒப்புமுண்டோ ?
இல்லையே இல்லையே

யாரும் அவரில் ஏமாந்ததுண்டோ ?
இல்லையே இல்லையே
எப்பாவியும் தள்ளப்பட்டதுண்டோ ?
இல்லையே இல்லையே

இயேசுவைப் போல் மீட்பர் எங்குமில்லை
இல்லையே இல்லையே
அன்பரில் அன்பர் எவருமில்லை
இல்லையே இல்லையே

## 120. இயேசுவே வழி

இயேசுவே வழி சத்தியம் ஜீவன்
இயேசுவே ஒளி நித்யம் தேவன் (2)

புது வாழ்வு எனக்கு தந்தார்
சமாதானம் நிறைவாய் அளித்தார்
பாவங்கள் யாவும் போக்கினார்
சாபங்கள் யாவும் தொலைத்தார்
கல்வாரி மீதில் எனக்காய்
தம் உதிரம் சிந்தி மரித்தார்
மூன்றாம் நாளில் உயிர்த்தார்
உன்னதத்தில் அமர்ந்தார்

நல்ல மேய்ப்பானாகக் காத்தார்
என்னை தமயனாகக் கொண்டார்

என் நண்பனாக வந்தார்
என் தலைவனாக நின்றார்
மேகங்கள் மீதில் ஓர் நாள்
மணவாளனாக வருவார்
என்னை அணைத்துக் கொள்வார்
வானில் கொண்டு செல்வார்.

## 121. இயேசு என்ற திரு நாமத்திற்கு

இயேசு என்ற திரு நாமத்திற்கு
எப்போதுமே மிக ஸ்தோத்திரம்

வானிலும் பூவிலும் மேலான நாமம்
வல்லமையுள்ள நாமமது
தூயர் சொல்லித் துதித்திடும் நாமமது

வேதாளம் பாதாளம் யாவையும் ஜெயித்த
வீரமுள்ள திரு நாமமது
நாமும் வென்றிடுவோமிந்த நாமத்திலே

பாவத்திலே மாளும் பாவியை மீட்க
பாரினில் வந்த மெய் நாமமது
பரலோகத்தில் சேர்க்கும் நாமமது

உத்தம பக்தர்கள் போற்றித் துதித்திடும்
உன்னத தேவனின் நாமமது
உலகமெங்கும் ஜொலித்திடும் நாமமது

சஞ்சலம் வருத்தம் சோதனை நேரத்தில்
தாங்கி நடத்திடும் நாமமது
தடை முற்றும் அகற்றிடும் நாமமது

## 122. இயேசுக் கிறிஸ்துவின்

இயேசுக் கிறிஸ்துவின் நல் சீடராகுவோம்
விசுவாசத்தில் முன் நடப்போம்
இனி எல்லோருமே அவர் பணிக்கெனவே

ஒன்றாய் எந்நாளும் உழைத்திடுவோம்

நம் இயேசு இராஜாவே இதோ வேகம் வாராரே
அதி வேகமாய் செயல்படுவோம்

மனிதர் யாரிடமும் பாசம் காட்டுவோம்
இயேசு மந்தைக்குள் அழைத்திடுவோம்
அதி உற்சாகமாய் அதி சீக்கிரமாய்
இராஜ பாதையை செம்மையாக்குவோம்

சாத்தானின் சதிகளைத் தகர்த்திடுவோம்
இனி இயேசுவுக்காய் வாழ்ந்திடுவோம்
இந்தப் பார்முழுதும் இயேசு நாமத்தையே
எல்லா ஊரிலும் எடுத்துரைப்போம்

ஆவி, ஆத்துமா, தேகம் அவர் பணிக்கே
இனி நானல்ல அவரே எல்லாம்
என முடிவு செய்தோம், அதில் நிலைத்திருப்போம்
அவர் நாளினில் மகிழ்ந்திடுவோம்

## 123. இயேசு ராஜனின்

இயேசு ராஜனின் திருவடிக்கு
சரணம், சரணம், சரணம்
ஆத்ம நாதனின் மலரடிக்கு
சரணம், சரணம், சரணம்

பார் போற்றும் தூய தூய தேவனே,
மெய் ராஜாவே எங்கள் நாதனே
ஆற்றித் தேற்றித் துணை யாவும் ஆனீரே,
சரணம், சரணம், சரணம்.

இளைப்பாறுதல் தரும் தேவனே
இன்னல் துன்பம் நீக்கும் அருள் நாதனே
ஏழை என்னை ஆற்றித் தேற்றிக் காத்தீரே
சரணம், சரணம், சரணம்.

இன்னல் துன்பம் யாவும் போக்க வல்லோரே,
பெலன் ஈந்து வலக்கரம் பிடித்தீரே
ஆவி ஆத்மா சரீரமும் படைத்தீரே
சரணம், சரணம், சரணம்.

## 124. இயேசு ராஜா முன்னே

இயேசு ராஜா முன்னே செல்கிறார்
ஓசன்னா கீதம் பாடுவோம்
வேகம் சென்றிடுவோம்

ஓசன்னா ஜெயமே (2)
ஓசன்னா ஜெயம் நமக்கே (2)

அல்லேலூயா துதி மகிமை—என்றும்
அல்லேலூயா துதி மகிமை
இயேசு ராஜா எங்கள் ராஜா
என்றென்றும் போற்றிடுவோம்
துன்பங்கள் சூழ்ந்து வந்தாலும்
தொல்லை கஷ்டங்கள் தேடி வந்தாலும்
பயமும் இல்லை கலக்கம் இல்லை
கர்த்தர் நம்முடனே

செங்கடல் தடை செய்தாலும்
பார்வோன் சேனைகள் பின்தொடர்ந்தாலும்
அச்சமில்லை திகிலுமில்லை
அற்புதர் நம்முடனே

யோர்தானின் வெள்ளம் வந்தாலும்
எரிகோ கோட்டை எதிர் நின்றாலும்
பயமும் இல்லை கலக்கம் இல்லை
மீட்பர் நம்முடனே

## 125. இஸ்ரவேலின் நாதன்

இஸ்ரவேலின் நாதனாக வாழும் எ஌ங்கள் தேவன்
சத்திய ஜீவ பாதை காட்டும் தேவன்

மனிதனாய் பூமியில் பிறந்த எங்கள் தேவன்
நித்திய ஜீவன் தந்திடும் என் தேவன்

அப்பா பிதாவே தேவனே
உம் இராஜ்யம் வர வேண்டுமே
உந்தன் திரு சித்தம் பூமியில்
என்றென்றும் நிறைவேற வேண்டுமே

செங்கடலில் நீர் அன்று பாதை காண்பித்தீர்
பாலைவனத்தில் நீர் மன்னா கொடுத்தீர்
கடும்பகலில் மேகஸ்தம்பமாய்
இரவில் ஜீவ அக்கினியாய்
சீனாய் மாமலை மீதினில் நீர்
நியாயப் பிரமாணங்கள் கொடுத்தீரே

மனிதனாய் பூமியில் அவதரித்தீர்
மண்ணுலகில் ஜீவ பலியானீர்
திரு இரத்தமும் ஜீவ அப்பமுமாய்
இவ்வுலகத்தின் ஜீவனாய்
வழியும் சத்தியமும் ஆனவரே
உம் திரு நாமம் வாழ்த்திடுவேன்

## 126. உம் பாதம் பணிந்தேன்

உம் பாதம் பணிந்தேன் என்னாலும் துதியே
உம்மையன்றி யாரைப்பாடுவேன் இயேசையா
உந்தன் அன்பு உள்ளம் பொங்குதே

பரிசுத்தமே பரவசமே
பரனேசருளே பரம்பொருளே
தேடினதால் நான் கண்டடைந்தேன்
பாடிட பாடல்கள் ஈந்தளித்தீர்

நெருக்கத்திலே உம்மை அழைத்தேன்
நெருங்கி உதவி எனக்களித்தீர்
வழிதப்பி நான் அலைந்திடாமல்
அனுதினம் என்னை தாங்குகிறீர்

என் இதய தெய்வம் நீரே
எனது இறைவா ஆறுயிரே
நேசிக்கிறேன் இயேசுவே
உம்முகம் எஙு்கு கண்டடைவேன்

## 127. உம்மைப் போல யாருமில்லை

உம்மைப் போல யாருமில்லை
எந்தன் அன்பர் இயேசு நாதா
தாயை போல தேற்றினீர் அய்யா
தந்தை போல் என்னை தாஙு்கினீரே

மலைகள் பர்வதஙு்கள் விலகினாலும்
உமது கிருபை விலகாது
புது வாழ்வினை தந்தீர் அய்யா

பாவ சேற்றினில் எழுந்த என்னை
□ க்கி எடுத்து சுத்திகரித்தீர்
எனை என்றும் நடத்தி செல்லும்

கஷ்டஙு்கள் சூழ்ந்திடும் வேளையிலே
சோர்ந்திடா பெலன் அளித்தீரையா
உந்தன் அன்பு மாறாதையா

## 128. உம்மையே நான் நேசிப்பேன்

உம்மையே நான் நேசிப்பேன்(3)
பின் திரும்பேனே,

உம் சந்நிதியில் முழஙு்காலில் நின்று
உம் பாதையில் நான் நடந்திட்டால்
இன்னல் துன்பமே வந்தாலும்
நான் பின் திரும்பேனே

உம்மையே நான் ஆராதிப்பேன் (3)
பின் திரும்பேனே

உம் சந்நிதியில் முழங்காலில் நின்று
உம் பாதையில் நான் நடந்திட்டால்
இன்னல் துன்பமே வந்தாலும்
நான் பின் திரும்பேனே

## 129. உன்னதமானவரின்

உன்னதமானவரின் உயர்மறைவிலிருக்கிறவன்
சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்
இதுபரம சிலாக்கியமே

அவர் செட்டையின் கீழ் அடைக்கலம் புகவே
தம் சிறகுகளால் மூடுவார்

தேவன் என் அடைக்கலமே,
என்கோட்டையும் அரணுமவர்
அவர் சத்தியம் பரிசையும் கேடகமாம்
என் நம்பிக்கையும் அவரே

இரவின் பயங்கரத்துக்கும்
பகலில் பறக்கும் அம்புக்கும்
இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
நான் பயப்படவே மாட்டேன்

ஆயிரம் பதினாயிரம்
பேர்கள், உன்பக்கம் விழுந்தாலும்
அது ஒரு காலத்தும், உன்னை அணுகிடாதே
உன்தேவன் உன் தாபரமே

## 130. உந்தன் நாமம் மேன்மை போல்

உந்தன் நாமம் மேன்மை போல்
வேறொரு நாமம் இல்லையே

நீரே என் தேவன் (2)
வல்லமை உள்ளவரே

நீரே என் தேவன் (2)
ஆலோசனை கர்த்தரே

உம்மை நான் ஆராதிப்பேன்(3)
இயேசுவே இயேசுவே
அன்பரே நல்லவரே வல்லவரே
என் ஆண்டவரே(3)

## 131 எக்காள சத்தம்

எக்காள சத்தம் வானில் தொனித்திடவே
எம் இயேசு மா ராஜனே வந்திடுவார்.

அந்தநாள் மிக சமீபமே
சுத்தர்கள் யாவரும் சேர்ந்திடவே
தேவ எக்காளம் வானில் முழங்க
தேவாதி தேவனைச் சந்திப்போமே

வானமும் பூமியும் மாறிடினும்
வல்லவர் வாக்குதான் மாறிடாதே
தேவதூதர் பாடல் தொனிக்க
தேவன் அவரையே தரிசிப்போமே

கண்ணிமை நேரத்தில் மாறிடுவோம்.
விண்ணிலே யாவரும் சேர்ந்திடுவோம்
கண்ணீர் கவலை அங்கே இல்லை
கர்த்தர் தாமே வெளிச்சமாவார்.

கர்த்தரின் வேளையை நாம் அறியோம்
கர்த்தரின் சித்தமே செய்திடுவோம்
பலன்கள் யாவையும் அவரே அளிப்பார்
பரமனோ டென்றும் வாழ்ந்திடுவோம்.

## 132. எல்லாம் இயேசுவே

எல்லாம் இயேசுவே, எனக்கெல்லாம் இயேசுவே

தொல்லை மிகு இவ்வுலகில் துணை இயேசுவே

ஆயனும், சகாயனும், நேயனுமுபாயனும்
நாயனும், எனக்கன்பான ஞான மணவாளனும்

தந்தை தாய், இனம் ஜனம் பந்துள்ளோர்,
சிநேகிதர்
சந்தோஷ, சகல யோக சம்பூரண பாக்யமும்

கவலையிலாறுதலும் கங்குலிலென் ஜோதியும்
கஷ்ட நோய்ப்படுக்கையிலே கைகண்ட
ஔஷதமும்

போதகப் பிதாவுமென் போக்கினில் வரத்தினில்
ஆதரவு செய்திடுங் கூட்டாளியுமென் தோழனும்

## 133. எந்நாளுமே துதிப்பாய்

எந்நாளுமே துதிப்பாய் –என்னாத்துமாவே நீ
எந்நாளுமே துதிப்பாய்

இந்நாள் வரையினில் உனனதனார் செய்த (2)
எண்ணிலா நன்மைகள் யாவு மறவாது

பாவங்கள் எத்தனையோநினையா திருந்தாருன்
பாவங்கள் எத்தனையோ
பாழான நோயை அகற்றிக் குணமாக்கிப் (2)
பாரினில் வைத்த மகா தயவை எண்ணி

எத்தனையோ கிருபை உன்னுயிர்க்குச் செய்தாரே
எத்தனையோ கிருபை
நித்தமுனைமுடி சூட்டினதுமன்றி (2)
செத்திடாதபடி ஜ“வனை மீட்டதால்.

நன்மையாலுன் வாயை நிறைத்தாரே, பூர்த்தியாய்
நன்மையாலுன் வாயை

உன்வயது கழுகைப் போல் பலங்கொண்டு (2)
இன்னும் இளமை போலாகவே செய்ததால்

பூமிக்கும் வானத்துக்கும் உள்ள தூரம் போலவே.
பூமிக்கும் வானத்துக்கும்
சாமி பயமுள்ளவர் மேல் அவர் அருள் (2)
சாலவும் தங்குமே, சத்திய மேயிது

## 134. என் உள்ளம் ஏஙுகுதே

என் உள்ளம் ஏங்குதே உம் அன்பிற்க்காகவே
என்றென்றும் ஏங்குதே உம் வாசம் வேண்டியே
என்றென்றும் பாராமல் எங்கென்றும் பாராமல்
எப்போதும் நெஞ்சில் உம்மை துதிப்பேன்
ஆற்றோரம் காற்றாகி உம்மை தொடுவேன்
ஆனந்த பூவாகி உம் காலில் கிடப்பேன்
இன்பஙுகள் தருவீர், பாசத்ததைபொழிவீர்
எப்போதும் எண்ணி எண்ணி மகிழ்வேன்

உம் அன்பை பார்க்கிலும்
வேறொன்றும் இல்லையே
ஓ என் நேசரே
ஒரு நாளும் மறவேனே
என் நேசர் நீர்தானே
என்றென்றுமே நான் உம்மை மறவேன்

உம் சத்தம் கேட்டுதான், என் நெஞ்சும் குளிரும்
உள்ளாடும் எண்னஙுகள என் கண்ணில் தெரியும்
சிற்பஙுகள் சிரிக்கும். சிந்தனை சிறக்கும்
உம் முகம் பார்த்து பூமி இமைக்கும்
அதிகாலை நேரத்தில் என் கண்கள் தவிக்கும்
உம் முகம் பார்த்துதான் என் நெஞ்சம் குளிரும்
இன்பங்கள் தருவீர் பாசத்தை பொழிவீர்
எப்போதும் எண்ணி எண்ணி மகிழ்வேன்

## 135. என் உயிரான இயேசு

என் உயிரான இயேசு என் உயிரோடு கலந்து
என் உயிரே நான் உம்மை துதிப்பேன்

உலகமெல்லாம் மரக்குதையா உணர்வுயெல்லாம் இனிக்குதையா
உன் நாமம் துதிக்கையிலே இயேசையா
உன் அன்பு ருசிக்கையிலே

என் உயிரான உயிரான உயிரான இயேசு (2)

உம் வசனம் எனக்கு உணவாகும் உடலுக்கெல்லாம் மருந்தாகும்
இரவும் பகலுமையா உந்தன்
வசனம் தியானிக்கையில்

## 136. என் எண்ணஙளுங்கள் யாவும்

என் எண்ணஙளுங்கள் யாவும்
உம்மிடமே என் தேவா, என் தேவா
என் செயல்கள் யாவும்
உமக்காகவே என் தேவா, என் தேவா
என் ஆவி ஆத்மா சரீரம் யாவும்
உமக்குரியதே தேவா
என் தேவா, என் தேவா

தேவனே நீர் என் தேவன்
அதிகாலமே உம்மை தேடுகிறேன்
வறண்ட நிலத்தில் என் ஆத்துமா
உம்மேல் தாகமாய் இருக்கின்றது

என் உயிருள்ள நாள் எல்லாம் உம்மைத் துதித்து
உம் நாமத்தை சொல்லி கையெடுப்பேன்
என் உதடுகள் உம்மை போற்றிடுமே
உம் நாமத்தை என்றும் உயர்த்திடுமே

இராஜாமஙளுங்களில் உம்மை தியானிக்கிறேன்
உம் வல்லமை மகிமையை கண்டிடுவேன்
நீரே என் துணையாய் இருப்பதினால்

உம் செட்டையின் நிழலில் மகிழ்ந்திருப்பேன்

## 137. என் ஜீவனைப் பார்க்கிலும்

என் ஜீவனைப் பார்க்கிலும்
உம் கிருபை பெரியதே
என் உதடுகள் துதித்தப் போற்றுமே நேசரே

நீர் எந்தன் தேவன், நீர் எந்தன் இராஜன்
உயர்ந்த அடைக்கலம் கேடகமாம்
இன்னும் பெரிய காரியம் செய்திடுவீர்(2)

நான் பாவத்தை நேசித்தேன்
தீய வழிகளை நாடினேன்
உம் வேதத்தை நேசிக்க
என்னை மாற்றினீர் தேவனே

உம் செவியை சாய்க்கின்றீர்
என் ஜெபத்தை கேட்கின்றீர்
என்னை வெளிச்சத்தில் நடத்தியே
என் ஜீவனைக் காக்கின்றீர்

## 138. என் தேவன் என் வெளிச்சம்

என் தேவன் என் வெளிச்சம்
என்னை இரட்சிப்பவரும் அவரே
என் ஜீவன் எனக்கரணானவர்
நான் யாருக்கும் அஞ்சமாட்டேன்

தாயும் தந்தையும் தள்ளிவிட்டாலும்
தந்தை இயேசு என்னை சேர்த்துக் கொள்வார்
என்னை அவர் நிழலில் வைத்து காத்திடுவார்
கண்மலைமேல் ஏற்றி என்னை உயர்த்திடுவார்

தீமை செய்கின்றவர்கள் எனக்கு
தீமை செய்ய விரும்புகையில்
தேவனருகில் வந்து என்னைக் காத்திடுவார்

என்னை பகைத்தவர்கள் உடனே மறைவாரே

## 139. எனக்காய் ஜீவன் விட்டவரே

எனக்காய் ஜீவன் விட்டவரே
என்னோடிருக்க எழுந்தவரே
என்னை என்றும் வழி நடத்துவாரே
என்னை சந்திக்க வந்திடுவாரே

இயேசு போதுமே, இயேசு போதுமே,
எந்த நாளிலுமே, எந்நிலையிலுமே
எந்தன் வாழ்வினிலே இயேசு போதுமே.

பிசாசின் சோதனை பெருகிட்டாலும்
சோர்ந்து போகாமல் முன் செல்லவே
உலகமும் மாமிசமும் மயக்கிட்டாலும்
மயங்கிடாமல் முன்னேறவே

புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவார்
அமர்ந்த தண்ணீரண்டை நடத்திடுவார்
ஆத்துமாவை தினம் தேற்றிடுவார்
மரணப் பள்ளத்தாக்கில் காத்திடுவார்

மனிதர் என்னைக் கைவிட்டாலும்
மாமிசம் அழுகி நாறிட்டாலும்
ஐசுவரியம் யாவும் அழிந்திட்டாலும்
ஆகாதவன் என்று தள்ளிவிட்டாலும்

## 140. எந்தக் காலத்திலும்

எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்
இயேசுவே உம்மை நான் துதிப்பேன், துதிப்பேன்
எந்த வேளையிலும் துதிப்பேன்

ஆதியும் நீரே – அந்தமும் நீரே

ஜோதியும் நீரே – என் சொந்தமும் நீரே

தாய்தந்தை நீரே – தாதியும் நீரே
தாபரம் நீரே – என்தாரகம் நீரே

வாழ்விலும் நீரே – தாழ்விலும் நீரே
வாதையில் நீரே – என் பாதையில் நீரே

வானிலும் நீரே – பூவிலும் நீரே
ஆழியில் நீரே – எந்த ஆபத்தில் நீரே

## 141. எந்தன் ஜெபவேளை

எந்தன் ஜெபவேளை உமைத்தேடி வந்தேன்
தேவா பதில் தாருமே
எந்தன் கோட்டை எந்தன் தஞ்சம் நீரே
உம்மை நான் நாடி வந்தேன்

சோராது ஜெபித்திட
ஜெப ஆவி வரம் தாருமே
தடையாவும் அகற்றிடுமே
தயை கேட்டு உம்பாதம் வந்தேன்

உமக்மோடு எந்நாளும்
உறவாட அருள் செய்யுமே
கர்த்தாவே உம்வார்த்தையை
கேட்டிட காத்திருப்பேனே

நம்பிக்கை இல்லாமல்
அழிகின்ற மாந்தர்களை
மீட்டிடும் என் இயேசுவே
போராடி ஜெபிக்கிறேன் நாதா

## 142. எந்தன் நாவில் புதுப்பாட்டு

எந்தன் நாவில் புதுப்பாட்டு
எந்தன் இயேசு தருகிறார்

ஆனந்தம் கொள்ளுவேன்
அவரை நான் பாடுவேன்
உயிருள்ள நாள் வரையில் (2)

பாவ இருள் என்னை வந்து சூழ்ந்து கொள்கையில்
தேவனவர் தீபமாய் என்னை தேற்றினார்

சேற்றில் வீழ்ந்த என்னை அவர் தூக்கி எடுத்தார்
நாற்றமெல்லாம் ஜீவரத்தம் கொண்டு மாற்றினார்

தந்தை தாயும் நண்பர் உற்றார் யாவுமாகினார்
நிந்தை தாங்கி எங்குமவர் மேன்மை சொல்லுவேன்

இவ்வுலக பாடு என்னை என்ன செய்திடும்
அவ்வுலக வாழ்வைக் காண காத்திருக்கிறேன்

## 143. என்னண்டை வந்திடாயோ

என்னண்டை வந்திடாயோ
பின்பற்றி வந்திடாயோ – உன்னை
நீ வெறுத்து, சிலுவையை எடுத்து
பின்பற்றி வந்திடாயோ (2)

உலகை ஆதாயம் செய்தும்
ஜீவனோ நஷ்டப்பட்டால் – மரணம்
வரும் வேளை மறுமைக்குள் செல்கையில்
என்ன லாபம் உனக்கு.. (2)

கல்வாரி காட்சி கண்டும்
கல்மனம் உருகலையோ–ஐங்காயங்கள்
தன்னில் அடைக்கலம் அளித்திட
அழைப்போரை பாராயோ (2)

உம்மண்டை வந்திடுவேன்
பின்பற்றி வந்திடுவேன் – என்னை
நான் வெறுத்து, சிலுவையை எடுத்து

பின்பற்றி வந்திடுவேன் (2)

## 144. எண்ணிலடங்கா

எண்ணிலடங்கா தோத்திரம்
என்றென்றும் நான் பாடுவேன்
இந்நாள் வரை என் வாழ்விலே
நீர் செய்த நன்மைக்கே

வானாதி வானங்கள் யாவும்
அதன் கீழுள்ள ஆகாயமும்
பூமியில் வாழ்கின்ற யாவும்,
கர்த்தர் உம்மைப் போற்றுதே

காட்டினில் வாழ்கின்ற யாவும்
கடும் காற்றும், பனித்தூறலும்
பூமியில் வாழ்கின்ற யாவும்
கர்த்தர் உம்மைப் போற்றுதே

## 145. என்னை மறவா

என்னை மறவா இயேசு நாதா
உந்தன் தயவால் என்னை நடத்தும்

வல்ல ஜீவ வாக்குத்தத்தங்கள்
வரைந்தெனக்காய் ஈந்ததாலே ஸ்தோத்திரம்
ஆபத்திலே அரும் துணையே
பாதைக்கு நல்ல தீபமிதே

பயப்படாதே வலங்கரத்தாலே
பாதுகாப்பேன் என்றதாலே ஸ்தோத்திரம்
ஏழை என்னை நின் கையினின்று
எவரும் பறிக்க இயலாதே

தாய் தன் சேயை மறந்து விட்டாலும்
நான் மறவேன் என்றதாலே ஸ்தோத்திரம்

உள்ளங்கையில் என்னை வரைந்தீர்
உன்னதர் எந்தன் புகலிடமே

என்னை முற்றும் ஒப்புவித்தேனே
ஏற்று என்றும் நடத்துவீரே ஸ்தோத்திரம்
எப்படியும் உம் வருகையிலே
ஏழை என்னைச் சேர்த்திடுமே

## 146. என் இயேசுவே

என் இயேசுவே நான் என்றும் உந்தன் சொந்தம்
என் ராஜனே அனுதினமும் வழி நடத்தும்

உலையான சேற்றினின்றே
தூக்கியே நிறுத்தினிரே
உந்தனை நான் மறவேன்
உந்தனைப் போற்றிடுவேன்

தாயினும் அன்பு வைத்தே
தாங்கியே காப்பவரே
ஜீவிய காலமெல்லாம்
உம்மையே பின்செல்லுவேன்

அலைந்தோடும் கடல் அதனை
அதட்டியே அமர்த்தினீரே
வார்த்தையின் வல்லமையை
என்றுமே காணச்செய்யும்

## 147. ஒரு வார்த்தை

ஒரு வார்த்தை (2)
ஒரு வார்த்தை சொல்லும் கர்த்தாவே
எஙுகள் வாழ்க்கை எல்லாம் செழிப்பாகுமே

உந்தன் வார்த்தையிலே சுகம்
உந்தன் வார்த்தையிலே மதுரம்
உந்தன் வார்த்தையிலே எல்லாம் சந்தோஷம

.

மாறாவின் தண்ணீரெல்லாம்
மதுரமாக மாறசெய்யும்
கண்ணீர் மாறிடும், துக்கம் மாறிடும்

இருளான வாழ்க்கை எல்லாம்
செழிப்பாக மாறசெய்யும்
கண்ணீர் மாறிடும், துக்கம் மாறிடும்

## 148. கர்த்தரை நம்பியே ஜீவிப்போம்

கர்த்தரை நம்பியே ஜீவிப்போம்
கவலை கஷ்டங்கள் தீர்ந்திடும்
கைவிடா காத்திடும் பரமனின்
கரங்களை நாம் பற்றிக் கொள்வோம்

ஜீவ தேவன் பின் செல்லுவோம்
ஜீவ ஒளிதனைக் கண்டடைவோம்
மனதின் காரிருள் நீங்கிடவே
மாசமாதானம் தங்கும்

உண்மை வழி நடந்திடும்
உத்தமனுக்கென்றும் கர்த்தர் துணை
கண்கள் அவன் மீது வைத்திடுவார்
கருத்தாய் காத்திடுவார்

உள்ளமதின் பாரங்களை
ஊக்கமாய் கர்த்தரிடம் சொல்லுவோம்
இக்கட்டு நேரத்தில் கூப்பிடுவோம்
தேவன் வந்தாதரிப்பார்

இம்மைக் கேற்ற இன்பங்களை
நம்மை விட்டே முற்றும் அகற்றுவோம்
மாறாத சந்தோஷம் தேடிடுவோம்
மறுமை இராஜ்ஜியத்தில்

## 149. கர்த்தாவே தேவர்களில்

கர்த்தாவே தேவர்களில்
உமக்கொப்பானவர் யார்
வானத்திலும் பூமியிலும்
உமக்கொப்பானவர் யார்

உமக்கொப்பானவர் யார்(2)
வானத்திலும் பூமியிலும்
உமக்கொப்பானவர் யார்

செங்கடலை நீர் பிளந்து
உந்தன் ஜனங்களை நடத்திச் சென்றீர்
நீர் நல்லவர் சர்வவல்லவர்
என்றும் வாக்கு மாறாதவர்

□ தர்கள் உண்ணும் உணவால்
உந்தன் ஜனங்களை போஷித்தீரே
உம்மைப் போல யாருண்டு
இந்த ஜனங்களை நேசித்திட

கன்மலையை நீர் பிளந்து
உந்தன் ஜனங்களின் தாகம் தீர்த்தீர்
உம் நாமம் அதிசயம்
என்றும் அற்புதம் செய்திடுவீர்

## 150. காக்கும் கரங்கள்

காக்கும் கரங்கள் உண்டெனக்கு
காத்திடுவார் கிருபையாலே
அல்லேலூயா பாடிப்பாடி
அலைகளை நான் தாண்டிடுவேன்

நம்பிவா இயேசுவை (2)

நிந்தனைகள் போராட்டம் வந்தும்
நீதியின் தேவன் தாங்கினாரே
நேசக்கொடி என்மேல் பறக்க
நேசருக்காய் ஜீவித்திடுவேன்

கன்மலைகள் பெயர்க்கும் படியாய்
கர்த்தர் உன்னைக் கரம் பிடித்தார்
காத்திருந்து பெலனடைந்து
கழுகுபோல எழும்பிடுவாய்

அத்தி மரம் துளிர்விடாமல்
ஆட்டுமந்தை முதலற்றாலும்
கர்த்தருக்கு காத்திருப்போர்
வெட்கப்பட்டுப் போவதில்லை.

## 151. காலையும் மாலையும்

காலையும் மாலை எவ்வேளையும்
கர்த்தரைக் கருத்துடன் பாடிடுவேன்
பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்
எனத் தூதர் பாடிடும் தொனி கேட்குதே

கர்த்தர் என் வெளிச்சம், ஜீவனின் பெலனும் கிருபையும் இரட்சிப்புமானார்
அஞ்சிடாமல் கலங்காமல் பயமின்றி திகிலின்றி அனுதினம் வாழ்ந்திடுவேன்

ஒன்றை நான் கேட்டேன் அதையே நாடுவேன் என்றும் தம் மகிமையைக் காண
ஜீவனுள்ள நாளெல்லாம் தம் ஆலயத்தில் தங்குவதை வாஞ்சித்து நாடிடுவேன்

எந்தன் முகத்தைத் தேடுங்கள் என்று என் கர்த்தர் சொன்னதினாலே
தம் முகத்தை தேடுவேனே கூப்பிடும் என் சத்தம் கேட்டு தயவாக பதிலளிப்பார்

## 152. கிருஸ்துவுக்குள் வாழும்

கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு
எப்போதும் வெற்றி உண்டு.

என்னென்ன துன்பம் வந்தாலும்
நான் கலங்கிடவே மாட்டேன்
யார் என்ன சொன்னாலும் நான்
சோர்ந்து போக மாட்டேன்

தீ நடுவே நடந்தாலும்
நான் எரிந்து போக மாட்டேன்
ஆறுகளை கடந்தாலும் நான்
மூழ்கிப் போக மாட்டேன்

என் ராஜா முன்னே செல்கிறார்
வெற்றி பவனி செய்கிறார்
குருத்தோலை கையிலேந்தி– நான்
ஓசன்னனா பாடிடுவேன்

சாத்தானின் அதிகாரமெல்லாம்
என் இயேசு பறித்து விட்டார்
சிலுவையில் அறைந்து விட்டார்
காலாலே மிதித்து விட்டார்.

## 153. குயவனே குயவனே

குயவனே குயவனே
படைப்பின் காரணனே
களிமண்ணான என்னையுமே
கண்ணோக்கிப் பார்த்திடுமே

வெறுமையான பாத்திரம் நான் வெறுத்துத் தள்ளாமலே
நிரம்பிவழியும் பாத்திரமாய் விளங்கச் செய்திடுமே
வேதத்தில் காணும் பாத்திரம் எல்லாம் இயேசுவைப் போற்றிடுமே
என்னையும் அவ்விதப் பாத்திரமாய் வனைந்து கொள்ளுமே

விலைபோகாத பாத்திரம் நான் விரும்புவாரில்லையே
விலையில்லா உம் கிருபையால் உகந்ததாக்கிடுமே
தடைகள் யாவும் நீக்கிஎன்னைத் தம்மைப்போல் மாற்றிடுமே
உடைத்து என்னை உந்தனுக்கே உடைமையாக்கிடுமே

மண்ணாசையில் நான் மயஙஞ்கியே மெய்வழிவிட்டகன்றேன்
கண்போன போக்கைப் பின்பற்றியே கண்டேனில்லை இன்பமே
காணமற்ப் போன பாத்திரம்,என்னை தேடிவந்த தெய்வமே
வாழ்நாளெள்லாம் உம் பாதம் செல்லும் பாதையில் நடத்திடுமே

## 154 . சந்தோஷம் பொங்குதே

சந்தோஷம் பொங்குதே (2)
சந்தோஷம் என்னில் பொங்குதே
இயேசு என்னை இரட்சித்தார்
முற்றும் என்னை மாற்றினார்
சந்தோஷம் என்னில் பொங்குதே

வழி தப்பி நான் திரிந்தேன்,
பாவ பழியதை சுமந்தலைந்தேன்
அவர் அன்புக்குரலே
அழைத்தது என்னையே
அந்த இன்பநாளில் எந்தன்
பாவம் நீங்கிற்றே

சத்துரு சோதித்திட
தேவ உத்தரவுடன் வருவான்
ஆனால் இயேசு கைவிடார்
தானாய் வந்து இரட்சிப்பார்
அந்த நல்ல இயேசு எந்தன்
சொந்தமானாரே

பாவத்தில் ஜீவிப்பவர்
பாதாளத்தில் அழிந்திடுவார்
நானோ பரலோகத்தில்
நாளும் பாடல் பாடிடுவேன்
என்னில் வாழும் இயேசுவோடு
என்றும் வாழுவேன்

## 155 சர்வ சிருஷ்டிக்கும்

சர்வ சிருஷ்டிக்கும் எஜமான் நீரே
சர்வ சிருஷ்டியைக் காப்பவர் நீரே
எங்கள் இதயத்தில் உம்மைப் போற்றுகிறோம்
என்றென்றும் பணிந்து தொழுவோம்

ஆ... அல்லேலுயா....... (7) ஆமென்

எந்தன் மீட்பரும் ஜீவனும் நீரே
என்னைக் காக்கும் கர்த்தரும் நீரே
என்னை உமக்கு என்றும் அர்ப்பணித்தேன்
என் வாழ்வில் ஜோதியும் நீரே

வானம் பூமி ஒழிந்து போனாலும்
உம் வார்த்தை என்றும் மாறாதே
உலகம் அழிந்து மறைந்துபோம்
விசுவாசி என்றென்றும் நிலைப்பான்

சாத்தான் உன்னை எதிர்த்த போதும்
ஜெய கிறிஸ்து உன்னோடு உண்டே
தோல்வி என்றும் உனக்கு இல்லையே
துதி கானம் தொனித்து மகிழ்வாய்

## 156. சிலுவையை நிமிர்ந்து

சிலுவையை நிமிர்ந்து பாராயோ
அதன் மகிமையை கொஞ்சம் கேளாயோ
உலகமே, உலகமே, உலகமே, உலகமே,

பாவியை மன்னிக்கும் சிலுவை இது – புது
ஆவியை தந்திடும் சிலுவை இது (2)
துன்பத்தைப் போக்கிடும் சிலுவை இது (2)
மனத்துயரத்தை நீக்கிடும சிலுவை இது
சிலுவை இது (4)

குறைகளை அகற்றிடும் சிலுவை இது – பல
நிறைகளை அளித்திடும் சிலுவை இது (2)
மரணத்தை வென்ற சிலுவை இது (2)
பலர் மானத்தைக் காத்த சிலுவை இது
சிலுவை இது (4)

அன்பினை வளர்த்திடும் சிலுவை இது – உன்
பண்பினை உயர்த்திடும் சிலுவை இது (2)
உண்மைக்கு விருந்தாம் சிலுவை இது (2)

மனத் திண்மைக்கு மருந்தாம் சிலுவை இது
சிலுவை இது (4)

## 157 சிலுவை சுமந்து கிறிஸ்து

சிலுவை சுமந்து கிறிஸ்து
சிந்தின இரத்தம் புரண்டோடியே
நதி போலவேப் பாய்கின்றதே
நம்பி இயேசு வண்டைவா

பொல்லா உலக சிற்றின்பங்கள்
எல்லாம் அழியும் மாயை
காணுத நிலையான சந்தோஷம் பூவினில்
கர்த்தாவின் அன்பண்டைவா

ஆத்தும மீட்பைப் பெற்றிடாமல்
ஆத்மா நஷ்டமடைந்தால்
லோகம் முழுவதும் ஆதாயமாக்கியும்
லாபம் ஒன்றுமில்லையே

பாவ மனித ஜாதிகளைப்
பாசமாய் மீட்க வந்தார்
பாவப் பரிகாரி கர்த்தர் இயேச நாதர்
பாவமெல்லாம் சுமந்தார்

நித்திய ஜீவன் வாஞ்சிப்பாயோ
நித்திய மோட்ச வாழ்வில்
தேடி வாராயோ பரிசுத்த ஜீவியம்
தேவை அதை அடைவாய்

## 158. ஸ்தோத்திரம் இயேசுநாதா

ஸ்தோத்திரம் இயேசுநாதா உமக்கென்றும்
ஸ்தோத்திரம் இயேசுநாதா
ஸ்தோத்திரம் செய்கின்றோம்
உம் அடியார் திரு நாமத்தினாதரவில்

இன்றையத் தினமதிலும் ஒருமித்து
கூட உம் நாமத்தினால்
தந்த நின் கிருபைக்காக உமக்கென்றும்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே

நின் உதிரமதினால் திறந்த
நின் ஜீவ புதுவழியாம்
நின் அடியார்க்குப் பிதாவின் சன்னதி
சேரவுமே சந்ததம்

இத்தனை மகத்வமுள்ள பதவி
ஈனர்கள் எங்களுக்கு
எத்தனை மாதயவு நின் கிருபை
எத்தனை ஆச்சரியம்

வானதூதர் சேனைகள் மனோகர
கீதங்களால் எப்போதும்
ஓய்வின்றிப்பாடும் துதிகள் ஏறும்
மன்னவனே உமக்கு

## 159. ஜீவனுள்ள தேவனே வாரும்

ஜீவனுள்ள தேவனே வாரும்
ஜீவ பாதையிலே நடத்தும்
ஜீவத் தண்ணீர் ஊறும் ஊற்றிலே
ஜீவன் பெற என்னை நடத்தும்

இயேசுவே நீர் பெரியவர்
இயேசுவே நீர் பரிசுத்தர்
இயேசுவே நீர் நல்லவர்
இயேசுவே நீர் வல்லவர்.

பாவிகள் துரோகிகள் ஐயா
பாவ ஆதாம் மக்களே தூயா
பாதகர் என் பாவம் போக்கவே
பாதகன் போல் தொங்கினீரல்லோ

ஐந்து கண்ட மக்களுக்காக
ஐந்து காயமேற்ற நேசரே
நொந்துருகி வந்த மக்கள் மேல்
நேச ஆவி வீச செய்குவீர்

வாக்கு தத்தம் செய்த கர்த்தரே
வாக்கு மாறா உண்மை நாதனே
வாக்கை நம்பி வந்து நிற்கிறோம்
வல்ல ஆவி மாறி ஊற்றுவீர்

### 160. ஜெபத்தைக் கேட்கும்

ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா
ஜெபத்தில் வாஞ்சை தந்தருளும்
ஜெபத்திலே தரித்திருந்து
ஜெபத்தின் மேன்மை காணச் செய்யும்.

ஜெபமே ஜீவன், ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம் (2)

ஊக்கத்துடனே ஓர் முகமாய்
வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொண்டு
நோக்கத்தை எல்லாம் நேர்மையாக்கி
கேட்கும்படி கிருபை செய்யும்

இடைவிடாமல் ஜெபம் செய்ய
இடையூரெல்லாம் நீக்கிவிடும்
சளைப்பில்லாமல் உந்தன் பாதம்
கடைசி மட்டும் காத்துக் கொள்வோம்

ஆகாத நோக்கம் சிந்தனையை
அகற்றும் எங்கள் நெஞ்சை விட்டு
பரிசுத்தமாக்கும் மனமெல்லாம்
வல்லமையோடே வேண்டிக்கொள்வோம்

## 161. தந்தானைத் துதிப்போமே

தந்தானைத் துதிப்போமே – திருச்
சபையாரே, கவி பாடிப்பாடி,
தந்தானைத் துதிப்போமே

விந்தையாய் நமக் கானந்த மானந்தமான
விள்ளற் கரியதோர் நன்மை மிகமிகத்

ஒய்யாரத்துச் சீயோனை – நீயும்
மெய்யாகக் களிகூர்ந்து நேர்ந்து,
ஒய்யாரத்துச் சீயோனை
ஐயனேசுக்குனின் கையைக்கூப்பித்துதி
செய்குவையே, மகிழ் கொள்ளுவையே

கண்ணார களித்தாயே, நன்மைக்
காட்சியைக் கண்டு ருசித்துப் புசித்து
கண்ணார களித்தாயே
எண்ணுக்கடங்காத எத்தனையோநன்மை
இன்னுமுன் மேற்சோனா மாறிபோற் பெய்துமே

தூரம் திரிந்த சீயோனே உன்னைத்
தூக்கி யெடுத்துக் கரத்தி லேந்தி,
தூரம் திரிந்த சீயோனே
ஆரங்கள் பூட்டி அலங்கரித்து நினை
அத்தன் மணவாட்டி யாக்கினது என்னை

சிங்காரக் கன்னிமாரே, உம்
அலங்காரக் கும்மி அடித்துப் படித்து
சிங்காரக் கன்னிமாரே
மங்காத உன் மணவாளன் இயேசுதனை
வாழ்த்தி வாழ்த்தி ஏத்திப் பணிந்திடும்.

## 162. தாசரே

தாசரே, இத் தரணியை அன்பாய்
இயேசுவுக்குச் சொந்தமாக்குவோம்

நேசமாய் இயேசுவை கூறுவோம்,
அவரை காண்பிப்போம் மாவிருள்
நீக்குவோம் வெளிச்சம் வீசுவோம்

வருத்தப்பட்டுப் பாரஞ் சுமந்தோரை
வருந்தியன்பாய் அழைத்திடுவோம்.
உரித்தாய் இயேசு பாவப் பாரத்தை நமது துக்கத்தை நமது துன்பத்தைச் சுமந்து
தீர்த்தாரே

பசியுற்றோர்க்குப் பிணியாளிகட்குப்
பட்சமாக உதவி செய்வோம்
உசித நன்மைகள் நிறைந்து, தமை மறந்து
இயேசு கனிந்து திரிந்தனரே

நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை
நீசரை நாம் உயர்த்திடுவோம்
பொறுக்கவொண்ணா கஷ்டத்துக்குள்
நிஷ்டூரத்துக்குள், படுகுழிக்குள் விழுந்தனரே

இந்துதேச மாது சிரோமணிகள்
விந்தை யொளிக்குள் வரவழைப்போம்:
சுந்தர குணங்களடைந்து அறிவிலுயர்ந்து
நிர்பந்தங்கள் தீர்ந்து, சிறந்திலங்கிட

## 163. திருக்கரத்தால் தாங்கியென்னை

திருக்கரத்தால் தாங்கியென்னை
திருசித்தம் போல் நடத்திடுமே
குயவன் கையில் களிமண் நான்
அனுதினம் நீர் வனைந்திடுமே

உம் வசனம் தியானிக்கையில்
இதயமதில் ஆறுதலே
காரிருளில் நடக்கையிலே
தீபமாக வழிநடத்தும்

ஆழ்கடலில் அலைகளினால்
அசையும் போது என் படகில்
ஆத்ம நண்பர் இயேசு உண்டு
சேர்ந்திடுவேன் அவர் சமூகம்.

அவர் நமக்காய் ஜீவன் தந்து
அளித்தனரே இந்த மீட்பு
கண்களினால் காண்கிறேனே
இன்பக் கானான் தேசமதை.

## 164. துதித்துப் பாடிடப் பாத்திரமே

துதித்துப் பாடிடப் பாத்திரமே
துங்கவன் இயேசுவின் நாமமதே
துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூயனை நேயமாய் ஸ்தோத்தரிப்போமே.

ஆஸ ஆற்புதமே அவர் நடத்துதலே
ஆனந்தமே பரமானந்தமே
நன்றியால் உள்ளமே மிகப்பொங்கிடுதே
நாம் அல்லேலூயா துதி சாற்றிடுவோம்

கடந்த நாட்களில் கண்மணிபோல்
கருத்துடன் நம்மைக் காத்தாரே
கர்த்தரையே நம்பி ஜுவித்திட
கிருபையும் ஈந்ததால் ஸ்தோத்தரிப்போமே

அக்கினி ஊடாய் நடந்தாலும்
ஆழியில் தண்ணீரைக் கடந்தாலும்
சோதனையோ மிகப் பெருகினாலும்
ஜெயம் நமகீந்ததால் ஸ்தோத்தரிப்போமே

இந்த வனாந்தர யாத்திரையில்
இன்பராம் இயேசு நம்மோடிருப்பார்
போகையிலும் நம் வருகையிலும்
புகலிடம் ஆனதால் ஸ்தோத்தரிப்போமே

## 165 . தேவகிருபை

தேவகிருபை என்றுமுள்ளதே
அவர் கிருபை என்றுமுள்ளதே
அவரைப் போற்றித் துதித்துப்பாடி
அல்லேலூயா என்றார்ப்பரிப்போம்

நெருக்கப்படடோம் மடிந்திடாமல்
கர்த்தர் தாம் நம்மைக் காத்ததாலே
அவர் நல்லவர் அவர் வல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே

சத்துரு சேனை தொடர்ந்து சூழ்கையில்
பக்தனாம் தாவீதின் தேவன் நமக்கு
முன் சென்றாரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே

காரிருள் போன்ற கஷ்டங்கள் வந்தும்
பாரினில் அவர் என் பாதையில் ஒளியாய்
என்னை நடத்தினார் அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே

## 166 . தேவ தேவனை

தேவ தேவனை துதித்திடுவோம்
சபையில் தேவன் எழுந்தருள
ஒரு மனதோடு அவர் நாமத்தை
துதிகள் செலுத்தி போற்றிடுவோம்

அல்லேலூயா தேவனுக்கே
அல்லேலூயா கர்த்தருக்கே
அல்லேலூயா பரிசுத்தர்க்கே
அல்லேலூயா இராஜனுக்கே

எங்கள் காலடி வழுவிடாமல்
எங்கள் நடைகளை ஸ்திரப்படுத்தும்

கண்மணிபோல காத்தருளும்
கிருபையில் நிதம் வழி நடத்தும்

சபையில் உம்மை அழைத்திடுவோம்
சகாயம்  பெற்று வாழ்ந்திடுவோம்
சாத்தானை என்றும் ஜெயித்திடுவோம்
சாகும் வரையில் உழைத்திடுவோம்

வானத்தில் அடையாளம் தோன்றிடுமே
இயேசு மேகத்தில் வந்திடுவார்
நாமும் அவருடன் சேர்ந்திடுவோம்
நம்மை ஆயத்தமாக்கிக் கொள்வோம்

## 167. தேவ பிதா என்தன் மேய்ப்பன்

தேவ பிதா என்தன் மேய்ப்பன் அல்லோ
சிறுமை தாழ்ச்சி அடைகிலனே
ஆவலதாய் எனைப் பைம்புல்மேல்
அவர் மேய்த்தமர் நீர் அருளுகின்றார்

ஆத்துமந் தன்னைக் குளிரப்பண்ணி
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார்

சா நிழல் பள்ளத் திறங்கிடினும்
சற்றும் தீங்கு கண்டஞ்சேனே,
வானபரன் என்னோடிருப்பார்,
வளை தடியும் கோலுமே தேற்றும்

பகைவர்க் கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்தி
சுக தயிலம் கொண்டென் தலையைச்
சுபமாய் அபிஷேகம் செய்குவார்

ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்

நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன்

## 168. தேவா நான் எதனால்

தேவா நான் எதனால் விசேஷித்தவன்
இராஜா நான் அதை தினம் யோசிப்பவன்
எதனால் எதனால்
நீர் என்னோடு வருவதனால்

மேகஸ்தம்பம் மேலிருந்து பாதுகாக்குது
பாதை காட்ட பகலெல்லாம் கூட செல்லுது
அன்பான தேவன் என்னோடு வருவார்
அதுபோதும் என் வாழ்விலே

பகல்சென்று அந்தகாரம் சூழ்ந்து கொண்டது
பரிசுத்தமான அக்கினி ஸ்தம்பம் செல்லுது
அன்பான தேவன் என்னோடு வருவார்
அதுபோதும் என் வாழ்விலே

தாகம்கொண்ட தேவஜனம் வானம் பார்க்குது
ஆவல்கொண்ட கன்மலையும் கூட செல்லுது
என் ஏக்கம் எல்லாம் என் தேவன் தீர்ப்பார்
சந்தோஷம் நான் காணுவேன்

வாழ்க்கையிலே கசப்புகள் கலந்திட்டாலும்
பாசமுள்ள ஒரு மரம் கூட வருது
மாறாவின் நீரைத் தேனாக மாற்றும்
என் நேசர் என்னோடுண்டு

## 169. தேவனே உமது சமுகத்திலே

தேவனே உமது சமுகத்திலே
எனது துதியை செலுத்துகிறேன்
நான் வாழும்நாட்கள் எல்லாம்
உம் வார்த்தையை பரப்பிடுவேன்

கொந்தளிப்பை நீர் அமர்த்துகிறீர்
அலைகளை நீர் அடக்குகிறீர்
காட்டுப்புள்ளுக்கும் கூட நீர்
புது உடைகளை உடுத்துகிறீர்

தீராத நோயையும் துறத்திடுவீர்
பொல்லாப்பு எனைதொட விடமாட்டீர்
கண் இமையை போலவே
என்னை கருத்தாய் காத்துக்கொள்வீர்

என் பாவத்ததையெல்லாம் நீர் சுமந்தீர்
எனக்காய் சிலுவையில் பலியானீர்
நீர் திரும்பி வருகையில்
உம்மோடே அழைத்து செல்வீர்

## 170. தேன் இனிமையிலும்

தேன் இனிமையிலும் இயேசுவின் நாமம்
திவ்விய மதுரமாமே, அதைத்
தேடியே நாடி ஒடியே வருவாய்,
தினமும் நீ, மனமே

காசினி தனிலே நேசமதாகக்
கஷ்டத்தை உத்தரித்தே – பாவக்
கசடதை அறுத்துச் சாபத்தைத் தொலைத்தார்
கண்டுணர் நீ மனமே

பாவியை மீட்கத் தாவியே உயிரைத்
தாமே ஈந்தவராம், பின்னும்
நேமியாம் கருணை நிலைவரமுண்டு,
நிதம்துதி என் மனமே

காலையில் பனிபோல் மாயமாய் உலகம்
உபாயமாய் நீங்கிவிடும் – என்றும்
கர்த்தரின் பாதம் நிச்சயம் நம்பு
கருத்தாய் நீ, மனமே

## 171. தொல்லைக் கஷ்டங்கள்

தொல்லைக் கஷ்டங்கள் சூழ்ந்திடும்
துன்பம் துக்கம் வரும்
இன்பத்தில் துன்பம் நேர்ந்திடும்
இருளாய் தோன்றும் எங்கும்

சோதனை வரும் வேளையில்
சொற்கேட்கும் செவியிலே
பரத்திலிருந்து ஜெயம் வரும்
பரன் என்னைக் காக்க வல்லார்.

காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு
காத்திடுவார் என்றுமே

ஐயம் மிகுந்ததோர் காலத்தில்
ஆவி குறைந்ததால்
மீட்பர் உதிர பலத்தால்
சத்துருவை வென்றேன்
என் பயம் யாவும் நீங்கிற்றே
இயேசு கைத் □ க்கினார்
முற்றும் என் உள்ளம் மாறிற்று
இயேசென்னைக் காக்க வல்லோர்.

என்ன வந்தாலும் நம்புவேன்
என் நேசர் மீட்பரை
யார் கைவிட்டாலும் பின் செல்வேன்
எனது இயேசுவை
அகல ஆழ உயரமாய்
எவ்வளவுன்பு கூர்ந்தார்
என்ன துன்பங்கள் வந்தாலும்
அவர் என்னைக் கைவிடார்.

## 172. தொழுகிறோம் எஙக்ள் பிதாவே

தொழுகிறோம் எஙக்ள் பிதாவே

பொழுதெல்லாம் ஆவி உண்மையுடனே
பரிசுத்த அலஞ்காரத்துடனே
தரிசிப்பதினால் சரணம் சரணம்

வெண்மையும் சிவப்பும்மானவர்
உண்மையை உருவாய் கொண்டவர்
என்னையே மீட்டுக் கொண்டவர்
தந்தையே இதோ சரணம் சரணம்

கரஞ்கள் பொன் வலையஞ்கள் போல
நிறஞ்களும் தஞ்கத்தைப் போல
கால்களும் கல் □ ண்கள் போல
காண்பதாலே சரணம் சரணம்

பார்திபனே கண ஸ்தோத்ரம்
கீர்த்தனம் மஞ்கள ஸ்தோத்ரம்
வாழ்க வாழ்க வாழ்க என்றும்
அல்லே□ யா ஆமேன் ஆமேன்

## 173. தோத்திரம் பாடியே

தோத்திரம் பாடியே போற்றிடுவேன்
தேவாதி தேவனை, ராஜாதி ராஜனை
வாழ்த்தி வணங்கிடுவேன்

அற்புதமான அன்பே – என்னில்
பொற்பரன் பாராட்டும் தூய அன்பே
என்றும்மாறா தேவ அன்பே,
என்னுள்ளம் தங்கும் அன்பே

ஜோதியாய் வந்த அன்பே – பூவில்
ஜீவன் தந்து என்னை மீட்ட அன்பே
தியாகமான தேவ அன்பே,
திவ்ய மதுர அன்பே

ஆதர வான அன்பே – நித்தம்

அன்னைபோல் என்னையும் தாங்கும் அன்பே
உன்னதமான தேவ அன்பே,
உள்ளம் கவரும் அன்பே.

வாக்கு மாறாத அன்பே – திரு
வார்த்தையுரைத்தென்னைத் தேற்றும் அன்பே
சர்வ வல்ல தேவ அன்பே,
சந்ததம் ஒங்கும் அன்பே.

## 174. நம் தேவன் அன்புள்ளவர்

நம் தேவன் அன்புள்ளவர்
நம் தேவன் பரிசுத்தர்
நம் தேவன் நீதிபரர்
நமக்காக ஜீவன் தந்த இயேசு அவரே (2)

நன்மை ஏதும் ஒன்றும் நம்மில்லில்லையே
என்ற போதும் நம்மை நேசித்தாரே
ஆ ஆ அவர் அன்பில் மகிழ்வோம்
அன்பரின் பாதம் பணிவோம் (2)

வான மீதில் இயேசு இறங்கி வருவார்
தேவ தூதர் போல் மகிமை அடைவோம்
ஆ ஆ எங்கள் தேவா வாருமே
அழைத்து வானில் செல்லுமே (2)

அல்லேலூயா கீதம் நாம் என்றும் பாடுவோம்
ஆண்டவரோடென்றும் நாம் ஆளுகை செய்வோம்
ஆ ஆ அந்த நாள் நெருங்குதே
நினைத்தால் நெஞ்சம் பொங்குதே. (2)

## 175. நன்றியால் துதிபாடு

நன்றியால் துதிபாடு உன் இயேசுவை
நாவாலே என்றும் பாடு

வல்லவர் நல்லவர் போதுமானவர்

வார்த்தையில் உண்மையுள்ளவர் (2)

எரிகோ மதிலும் முன்னே வந்தாலும்
இயேசு உந்தன் முன்னே செல்கிறார்
கலங்கிடாதே திகைத்திடாதே
துதியினால் இடிந்துவிழும்

செங்கடல் நம்மை சூழ்ந்து நின்றாலும்
சிலுவையின் நிழலுண்டு
பாடிடுவோம் துதித்திடுவோம்
பாதைகள் கிடைத்து விடும்

கோலியாத் நம்மை எதிர்த்து வந்தாலும்
கொஞ்சமும் பயம் வேண்டாம்
இயேசு என்னும் நாமம் உண்டு
இன்றே ஜெயித்திடுவோம்

### 176. நானும் என் வீட்டாரும்

நானும் என் வீட்டாருமோவென்றால்
கர்த்தரையே சேவிப்போம்
நீயும் சேவிப்பாயா (2)

கர்த்தரையே சேவிப்பது ஆகாததென்று கண்டால்
யாரை நீ சேவிப்பாயென்பதை
இன்றே தீர்மானம் செய்வாய்

அடிமையான நம்மையுமே
தேவாதி தேவன் மீட்டார்
மாபெரும் அடையாளங்கள் செய்திட்ட
கர்த்தரை சேவிப்பாயா

நம்பாதையில் காப்பாற்றியே
கர்த்தர் நடத்தினாரே
கர்த்தர் தந்த ஆசீர்யாவும் கண்டு
நன்றியாய் சேவிப்பாயா

நன்மையான ஈவுகளை
தேவாதி தேவன் தந்தார்
கீழ்படிந்தே அவர் சத்தம் கேட்டு
சாட்சியாய் ஜீவிப்பாயா

## 177. நான் பாவிதான்

நான் பாவிதான் ஆனாலும் நீர்
மாசற்ற ரத்தம் சிந்தினீர்
வா என்று என்னை அழைத்தீர்
என் மீட்பரே வந்தேன் வந்தேன்

நான் பாவிதான் என் நெஞ்சிலே
கறை பிடித்திருக்குதே
என் கறை நீங்க இப்போதே
என் மீட்பரே வந்தேன் வந்தேன்

நான் பாவிதான் பயத்தினால்
அனைத்து பாவப் பாரத்தால்
அமிழ்ந்து மாண்டு போவதால்
என் மீட்பரே வந்தேன் வந்தேன்

நான் பாவிதான் இறங்குவீர்
அனைத்து, காத்து இரட்சிப்பீர்
அருளும், செல்வம் அளிப்பீர்
என் மீட்பரே வந்தேன் வந்தேன்

## 178. நிரந்தரம் நிரந்தரம்

அம்மையப்பன் உந்தன் அன்பே நிரந்தரம்
மாறும் உலகில் மாறா உம் உறவே நிரந்தரம்
இம்மை வாழ்வில் மறுமை இருப்பது நிரந்தரம்

நான் மாண்டபின்பும் உம்மில் உயிர்ப்பது
நிரந்தரம்

நிரந்தரம் நிரந்தரம் நீரே நிரந்தரம்
அம்மையப்பன் உந்தன் அன்பே நிரந்தரம்
மாறும் உலகில் மாறா உம் உறவே நிரந்தரம்

தாயின் அன்பு சேய்க்கு இஞ்கே நிரந்தரம்
தாயும் தந்தையும் எமக்கு நீரே நிரந்தரம்
தேயும் வாழ்வில் நம்பிக்கை நீரே நிரந்தரம்
நான் சாயும் போது காப்பது நீரே நிரந்தரம்

செல்வஞ்கள் வளரும் இன்பத்தில் இல்லை
நிரந்தரம்
பதவியும் புகழும் தருவதில்லை நிரந்தரம்
நிலைவாழ்வு என்றும் நிஜமான நீரே நிரந்தரம்
அதின் விலைவாக எனைநீர் உம்மில்
இணைப்பாய் நிரந்தரம்

## 179. நீர் இல்லாத நாளெல்லாம்

நீர் இல்லாத நாளெள்ளாம் நாளாகுமா
நீர் இல்லாத வாழ்வெல்லாம் வாழ்வாகுமா

உயிரின் ஊற்றே நீர் ஆவாய்
உண்மையின் வழியே நீர் ஆவாய்
உறவின் பிறப்பே நீர் ஆவாய்
உள்ளத்தின் மகிழ்வே நீர் ஆவாய்

எனது ஆற்றலும் நீர் ஆவாய்
எனது வலிமையம் நீர் ஆவாய்
எனது அரணும் நீர் ஆவாய்
எனது கோட்டையும் நீர் ஆவாய்

எனது நினைவும் நீர் ஆவாய்
எனது மொழியம் நீர் ஆவாய்
எனது மீட்பும் நீர் ஆவாய்

எனது உயிற்பும் நீர் ஆவாய்

## 180. நீர் சொன்னால் போதும்

நீர் சொன்னால் போதும் செய்வேன்
நீர் காட்டும் வழியில் நடப்பேன்
உம் பாதம் ஒன்றே பிடிப்பேன்
என் அன்பு இயேசுவே

ஆராதனை இயேசுவுக்கே (4)

கடலின் மீது நடந்திட்ட
உம் அற்புத பாதஞ்கள்
எனக்கு முன்னே செல்வதால்
எனக்கில்லை கவலை
காற்றையும் கடலையும் அதட்டிய
உம் அற்புத வார்த்தைகள்
எந்தன் துணையாய் நிற்பதால்
எனக்கேது கவலை

பாதை எல்லாம் அந்தகாரம்
சூழ்ந்து கொண்டாலும்
பாதை காட்ட நேசர் உண்டு
பயமே இல்லையே
பார்வோன் சேனை தொடர்ந்து வந்து சூழ்ந்து கொண்டாலும்
பாதுகாக்க கர்த்தர் உண்டு
பயமே இல்லையே

## 181. நீர் மாத்தரம் எனக்கு

நீர் மாத்தரம் எனக்கு (2)
நீர் அல்லால் உலகில் யாருண்டு எனக்கு
மாயையான உலகில் நீர் மாத்தரம் எனக்கு
மாறிடும் உலகில் நீர் மாத்தரம் எனக்கு

அரணும் என் கோட்டையும்
நீர் மாத்தரம் எனக்கு

கோட்டையும் துறுகமும்
நீர் மாத்தரம் எனக்கு
துறுகமும் கேடகமும்
நீர் மாத்தரம் எனக்கு
கேடகமும் கண்மலையும்
நீர் மாத்தரம் எனக்கு

ஆசைவேறு உம்மையன்றி
யாருமில்லை எனக்கு
ஆதரவு உம்மையன்றி
யாரும்மில்லை எனக்கு
ஆனந்தம் உம்மையன்றி
ஒன்றுமில்லை எனக்கு
எண்ண஌ங்களில் உம்மையன்றி யாரும்மில்லை எனக்கு

## 182. நீரின்றி வாழ்வேது இறைவா

நீரின்றி வாழ்வேது இறைவா – உம்
நினைவின்றி மகிழ்வேது தேவா
உலகத்தில் □ றாண்டு நான் வாழ்ந்த போதும்
உம் இல்லத்தில் வாழும் ஒரு நாளே போதும்

நீரின்றி வாழ்வேது இறைவா – உம்
நினைவின்றி மகிழ்வேது தேவா

பல கோடி வார்த்தைகள் நான் கேட்டபோதும் இயேசுவே நீர் பேசும் ஒரு
வார்த்தை போதும் ஓராயிரம் ஜீவன் உயிர் வாழுமே – உம்வார்த்தையில் உண்டு
அற்புதமே

கல்லுக்கு தேரையை வைத்தவர் நீர் – அதற்குள்ளும் ஜீவனைத் தந்தவர் நீர்
உமையன்றி அணுவேதும் அசையாதய்யா
உம் துணையின்றி உயிர் வாழ முடியாதய்யா

எத்தனை நன்மைகள் செய்தீரய்யா – அதில்
எதற்கென்று நன்றிசொல்லி துதிப்பேனய்யா அத்தனையும் சொல்ல
வேண்டுமென்றால்
ஆயிரம் ஆண்டுகள் போதாதய்யா

## 183. நெஞ்சத்திலே தூய்மையுண்டோ

நெஞ்சத்திலே தூய்மையுண்டோ
இயேசு வருகின்றார்
நொறுங்குண்ட நெஞ்சத்தையே
இயேசு அழைக்கின்றார்

வருந்தி சுமக்கும் பாவம்
நம்மை கொடிய இருளில் சேர்க்கும்
செய்த பாவம் இனி போதும் (2)
அவர் பாதம் வந்து சேரும் (2)

குருதி சிந்தும் நெஞ்சம்
நம்மை கூர்ந்து நோக்கும் கண்கள்
அங்கு பாரும் செந்நீர் வெள்ளம் (2)
அவர் பாதம் வந்து சேரும் (2)

மாயலோக வாழ்வு
உன்னில் கோடி இன்பம் காட்டும்
என்னில் வாழும் அன்பர் இயேசு (2)
உன்னில் வாழ இடம் வேண்டும் (2)

## 184. பலிபீடத்தில் என்னை

பலிபீடத்தில் என்னை பரனே
படைக்கிறேனே இந்த வேலை
அடியனை திருசித்தம் போல
ஆண்டு நடத்திடுமே

கல்வாரியின் அன்பினையே
கண்டு விரைந்து நான் ஓடி வந்தேன்
கழுவும் உம் திரு இரத்தத்தாலே
கரை நீஙக இருதயத்தை

சுயம் என்னில் சாம்பலாய் மாற
சுத்தாவியே அனல் மூட்டும்

ஜெயம் பெற்று மாமிசம் சாக
தேவா அருள் செய்குவீர்

நீர் அல்லால் என்னாலே பாரில்
வேறொன்றும் செய்திட இயலேன்
சேற்றிலே வழுவாது என்னை
காத்துமக்காய் நிருத்தி

### 185. பாக்கியவான்

பாக்கியவான் மெய் பாக்கியவான்
இயேசுவையே ஏற்றுக்கொண்டால்
பாக்கியவான் மெய் பாக்கியவான்
வார்த்தையில் நிலைத்திருந்தால்

ஆவியில் எளியவன் பாக்கியவான்
தேவனின் ராஜ்ஜியம் அடைந்திடுவான்
துயரப்படுபவன் பாக்கியவான்
தேவனின் ஆறுதல் அடைந்திடுவான்

சாந்தமுள்ளவன் பாக்கியவான்
பூமியை சுதந்தரித்திடுவான்
நீதி மேல் வா□சையுள்ளவன் பாக்கியவான்
பூரண திருப்தியை அடைந்திடுவான்

இரக்கமுள்ளவன் பாக்கியவான்
தேவனின் இரக்கத்தை பெற்றிடுவான்
மனதில் தூய்மையுள்ளவன் பாக்கியவான்
தேவனை என்றுமே தரிசிப்பானே

### 186. பாடுங்கள் ஆண்டவர்க்கு

பாடுங்கள் ஆண்டவர்க்கு
புதியதோர் பாடலை பாடுங்கள்
அல்லேலூயா (2)

ஆண்டவர் தம் திருதலத்தில்

அவரை புகழ்ந்து பாடுங்கள்
மாண்புயர்வை மண்டலத்தில்
அவரை புகழ்ந்து பாடுங்கள்

எக்காள தொனி முழங்க
அவரை புகழ்ந்து பாடுங்கள்
வீணையுடன் யாழ் இசைத்து
அவரை புகழ்ந்து பாடுங்கள்

முரசொலித்து நடனம் செய்து
அவரை புகழ்ந்து பாடுங்கள்
நரம்பிசைத்து குழல் ஊதி
அவரை புகழ்ந்து பாடுங்கள்

நாதமிகு தாளத்துடன்
அவரை புகழ்ந்து பாடுங்கள்
கைத்தாள ஒளி முழங்க
அவரை புகழ்ந்து பாடுங்கள்

## 187. பாவ சஞ்சலத்தை நீக்க

பாவ சஞ்சலத்தை நீக்க
பிராண சிநேகிதருண்டே
பாவ சுமை தீர்த்துப் போட
இயேசுவின் நற்பாதமே
சேருவோமே திகைப்போமே
சால துக்கத் துன்பத்தால்
புத்தியீனம் மாறிப்போகும்
ஜெப தபஞ் செய்வதால்

கஷ்ட நஷ்டமுண்டானாலும்
இயேசு வண்டை சேருவோம்
மோசம் நாசம் நேரிட்டாலும்
ஜெப தூபங்காட்டுவோம்
நோக்குவார் உன் நெஞ்சின் நோவை

பலவீனத் தாங்குவார்
நீக்குவார் உன் மனச்சோர்வை
தீயகுணம் மாற்றுவார்.

பெலவீனமான போதும்
கிருபாசன முண்டே
இனஜனம் சாகும் போதும்
புகலிடம் இதுவே
ஒப்பில்லாத பிராண நேசா
உம்மை நம்பி நேசிப்போம்
அளவற்ற அருள் நாதா
உம்மை நோக்கி கெஞ்சுவோம்.

## 188. பாவிக்கும் புகலிடம்

பாவிக்குப் புகலிடம் இயேசு இரட்சகர்
பாரினில் பலியாக மாண்டாரே

பரிசுத்தரே பாவமானாரே
பாரமான சிலுவை சுமந்தவரே

காட்டிக் கொடுத்தான் முப்பது வெள்ளிக்
காசுக்காவே கர்த்தர் இயேசுவை
கொலை செய்யவே கொண்டு போனாரே
கொல்கோதா மலைக்கு இயேசுவை

கள்ளர் மத்தியில் ஒரு கள்ளன் போல்
குற்றமற்ற கிறிஸ்தேசு தொங்கினார்
பரிகாசமும், பசி தாகமும்
பெருங்காயமும் அடைந்தாரே

கைகள், கால்களில் ஆணி பாய்ந்திட
கிரீடம் முள்களில் பின்னி சூடிட
இரத்த வெள்ளத்தில் கர்த்தர் தொங்கினார்
இதைக் காணும் உள்ளம் தாங்குமோ ?

உலகத்தின் இரட்சகர் இயேசுவே

உயிர்கொடுத்தார் உயிர்த்தெழுந்தார்
தம்மை நம்பினார் உன்னைக் கைவிடார்
தளராமல் நம்பி ஓடிவா

## 189. போதுமென்கிற மனதுடனே

போதுமென்கிற மனதுடனே
தேவபக்தியே ஆதாயம்
மிகுந்த ஆதாயம் (3)

பண ஆசை எல்லாத் தீமைக்கும்
வேராயிருக்கிறது
அதை நாடி விசுவாசம் விட்டு
வேதனை அடைவானேன்
(பா மப மப மப கா கம கம கம ரீ கரிநிஸா)
நீதியை நாடுவோம், தேவ பக்தியை நாடுவோம்
விசுவாசத்தை நாடுவோம்
அன்பு பொறுமையை நாடுவோம்
சாந்த குணத்தையும் நாடுவோம்

விசுவாசத்தின் போராட்டத்தை
நன்றாய் போராடுவோம்
நித்திய ஜீவனை என்றும் பற்றிக்கொள்வோம்
(பா மப மப மப கா கம கம கம ரீ கரிநிஸா)
எதுவும் கொண்டு வந்ததில்லை
எதுவும் கொண்டு போவதில்லை
பண ஆசையின் தொல்லை
நமக்கு தேவையில்லை (2)

ஐசுவரியனாக விரும்புவது ஆபத்தானது
சோதனையும் மனுஷர் கேட்டிலும்
அழிவிலும் அமிழ்த்துவிடும்
(பா மப மப மப கா கம கம கம ரீ கரிநிஸா)
உண்ண உணவு போதும்
உடுக்க உடை போதும்
அத்ததைய மனது போதும்
கிறிஸ்து இயேசு போதும (2)

## 190. போற்றி துதிப்போம்

போற்றி துதிப்போம் எம் தேவ தேவனை
புதிய கிருபையுடனே
நேற்றும் இன்றும் என்றும், மாறா இயேசுவை
நாமென்றும் பாடித் துதிப்போம்

இயேசு என்னும் நாமமே
என் ஆத்துமாவின் கீதமே
என் நேசரேசுவை நான் என்றும்
போற்றி மகிழ்ந்திடுவேன்

கோரப் பயங்கரமான புயலில்
கொடிய அலையின் மத்தியில்
காக்கும் கரம் கொண்டு மார்பில்
சேர்த்தணைத்த
அன்பை என்றும் பாடுவேன்

யோர்தான் நதிப்போன்ற சோதனையிலும்
சோர்ந் தமிழ்ந்து மாளாதே
ஆர்ப்பின் ஜெய தொனியோடே பாதுகாத்த
அன்பை என்றும் பாடுவேன்

பூமி யகிலமும் சாட்சியாகவே
போங்களென்ற கட்டளையதால்
ஆவி, ஆத்துமாவும் தேகம் யாவுமின்று
ஈந்துதொண்டு செய்குவேன்

## 191. மகிழ்வோம், மகிழ்வோம்

மகிழ்வோம், மகிழ்வோம், தினமக மகிழ்வோம்
இயேசுராஜன் நம் சொந்தமாயினார்
இந்த பார்தலத்தின் சொந்தக்காரர் அவர்
எந்தன் உள்ளத்தில் சொந்தமானார்

ஆ ஆ ஆனந்தமே, பரமானந்தமே
இது மாபெரும் பாக்கியமே
இந்த பார்தலத்தின் சொந்தகாரரவர்
எந்தன் உள்ளத்தில் சொந்தமானார்.

சின்னஞ்சிறு வயதில் என்னைக் குறித்துவிட்டார்
தூரம் போயினும் கண்டு கொண்டார்
தமது ஜீவனை எனக்கும் அளித்து
ஜீவன் பெற்றுக் கொள் என்றுரைத்தார்.

எந்த சூழ்நிலையும் அவர் அன்பினின்று
என்னை பிரிக்காது காத்துக் கொள்வார்
என்னை நம்பி அவர் தந்த பொறுப்பதனை
அவர் வரும்வரை காத்துக் கொள்வேன்

அவர் வரும் நாளிலே என்னை கரம் அசைத்து
அன்பாய் கூப்பிட்டு சேர்த்துக் கொள்வார்
அவர் சமுகமதில் அங்கே அவருடனே
ஆடிப்பாடியே மகிழ்ந்திடுவேன்

## 192. மான்கள் நீரோடை வாஞ்சித்து

மான்கள் நீரோடை வாஞ்சித்து
கதரும் போல் தேவனே
எந்தன் ஆத்தமா உம்மையே
வாஞ்சித்து கதறுதே

தஞ்சமே நீர் அடைக்கலம் நீர்
கோட்டையும் நீர் என்றும் காப்பீர்

தேவன் மேல் ஆத்துமாவே
தாகமாயிருக்கிறதே
தேவனின் சந்நிதியில் நின்றிட
ஆத்துமா வாஞ்சிக்குதே

ஆத்துமா கலங்குவதேன்

நேசரை நினைத்திடுவாய்
அவரின் இரட்சிப்பினால் தினமும்
துதித்து போற்றிடுவோம்

தேவரீர் பகற் காலத்தில்
கிருபையை தருகின்றீர்
இரவில் பாடும் பாட்டு எந்தன்
வாயிலிருக்கிறதே

## 193. மௌனமாயிருக்காதே

மௌனமாயிருக்காதே (2)
இது சிந்திக்கும் காலம் செயல்படும் நேரம்
மௌனமாயிருக்காதே

அறுவடைக் காலத்தில் மௌனமாயிருந்தால்
அறுவடை இழப்பாயே
ஆண்டவர் காலத்தில் மௌனமாயிருந்தால்
இரட்சிப்புத்தான் வருமோ ?

இந்தியா இயேசுவை அறிந்திடும் காலம்
இதுதான் இதுதானே
இந்தக் காலத்தில் மௌனமாயிருந்தால்
இரட்சிப்புத்தான் வருமோ ?

பகட்டு வாழ்வோ பரமனின் அன்போ
எது உன்னை இழுக்கிறது ?
கணக்கு கேட்கும் கர்த்தர் வருவார்
வெறுங்கையாய் நிற்பாயோ ?

## 194. யாசிக்கிறேன் உமதன்பை

யாசிக்கிறேன் உமதன்பை மட்டும்
நேசிக்கிறேன் நான் உம்மை மட்டும்

நீர் நல்லவர் வல்லவர்
என்றும் காப்பவர்

நீர் பெரியவர், பரிசுத்தர்
அதிசயம் தருபவர்

என் போக்கிலும் வரத்திலும்
என்றும் காப்பவர்
என் நிலையினை உணர்பவர்
ஆறுதல் தருபவர்

என் பாதைக்கு வெளிச்சம் நீர்
நான் நடுந்து செல்லவே
நீர் காட்டிய வழிகளில்
என்றும் செல்லுவேன்

உன் விரல்களின் கிரியை நான்
உம்மை என்றும் பாடுவேன்
உம் வார்த்தையை பிரியமாய்
என்றும் நாடுவேன்

## 195. யேகோவா தேவனுக்கு

யேகோவா தேவனுக்கு ஆயிரம் நாமஙஂகள்
எதை சொல்லி பாடிடுவேன்
கர்த்தாதி கர்த்தர் செய்த நன்மைகள் ஆயிரம்
கரம் தட்டி பாடிடுவேன்

யேகோவா ஷாலோம் யேகோவா ஷம்மா
யேகோவா ருவா யேகோவா ரஹ்ப்பா

எல்லோயிக்கு அல்லேலூயா
என்னை நீரே கண்டீரையா
ஏக்கமெல்லாம் தீர்த்தீரையா
நான் தாகத்தோடு வந்தபோது
ஜீவத்தண்ணீர் எனக்குத்தந்து

தாகமெல்லாம் தீர்த்தீரையா

எல்ஷடாயும் நீஙகதாஙக
சர்வவல்ல தேவனாக
என்னை என்றும் நடத்தினீஙக
எபிநேசரும் நீஙகதாஙக
உதவிசெய்யும் தேவனாக
என்னை என்றும் தாஙகுவீஙக

எல்லோஹீமும் நீஙகதாஙக
எஙகும்முள்ள தேவன் நீஙக
எந்த நாளும் பாடுவீஙக.
இம்மானுவேல் நீஙகதாஙக
மண்ணில் வந்த தேவன் நீஙக
இன்றும் என்றும் பாடுவேஙக

## 196. யேகோவாயீரே

யேகோவாயீரே தந்தையாம் தெய்வம்
நீர் மாத்ரம் போதும் எனக்கு
யேகோவா ரஃப்பா சுகம் தரும் தெய்வம்
உம் தழும்புகளால் சுகமானோம்
யேகோவா ஷம்மா என்கூட இருப்பீர்
என் தேவையெல்லாம் சந்திப்பீர்

நீர் மாத்ரம் போதும் (3) எனக்கு

யேகோவா எல்லோஹீம் சிருஷ்டிப்பின் தேவனே
உம் வார்தையால் உருவாக்கினீர்
யேகோவா பரிசுத்தர் உன்னதர் நீரே
உம்மைபோல் வேறு தேவனில்லை
யேகோவா ஷாலோம் உம் சமாதானம்
தந்தீர் என் உள்ளத்தினில்

இயேசுவே நீரே என் ஆத்ம நேசர்
என் மேல் எவ்வளவன்புகூர்ந்தீர்
என்னையே மீட்க உம்மையே தந்தீர்

உம் அன்பிற்கு இணையில்லையே
என் வாழ்நாள் முழுதும் உமக்காக வாழ்வேன்
நீரே என்றேன்றும் போதும்

## 197. வருவாய் தருணமிதுவே

வருவாய் தருணமிதுவே அழைக்கிறாரே
வல்ல ஆண்டவர் இயேசு வண்டை

வாழ் நாளையெல்லாம் வீண்நாளாய்
வருத்தத்தோடு கழிப்பது ஏன்
வந்தவர் பாதம் சரணடைந்தால்
வாழ்வித்து உன்னைச்சேர்த்துக் கொள்வார்

தீராத பாவம் வியாதியையும்
மாறாத உந்தன் பெலவீனமும்
கோரக் குருசில் சுமந்து தீர்த்தார்
காயங்களால் நீகுணமடைய

சத்திய வாக்கை நம்பியே வா
நித்திய ஜீவன் உனக்களிப்பார்
உன்பேரை ஜீவபுத்தகத்தில்
உண்மையாய் இன்றும் எழுதிடுவார்

## 198. விடுதலை நாயகன்

விடுதலை நாயகன் வெற்றியைத் தருகிறார்
எனக்குள்ளே இருக்கிறார் என்ன ஆனந்தம்

நான் பாடிப்பாடி மகிழ்வேன் – தினம்
ஆடி ஆடித்துதிப்பேன் – எங்கும்
ஓடி ஓடி சொல்லுவேன்
என் இயேசு ஜீவிக்கிறார்

அவர் தேடி ஓடி வந்தார்

என்னைத் தேற்றி அனைத்துக் கொண்டார்
என் பாவம் அனைத்தும் மன்னித்தார்
புது மனிதனாக மாற்றினார்

அவர் அன்பின் அபிஷேகத்தால்
என்னை நிரப்பி நடத்துகின்றார்
சாத்தானின் வலிமை வெல்ல
அதிகாரம் எனக்குத் தந்தார்

செங்கடலைக் கடந்து செல்வேன்
யோர்தானை மிதித்து நடப்பேன்
எரிகோவை சுற்றி வருவேன்
எக்காளம் ஊதி ஜெயிப்பேன்

## 199. விந்தை கிறிஸ்தேசு ராஜா

விந்தை கிறிஸ்தேசு ராஜா
உந்தன் சிலுவை என் மேன்மை.

சுந்தரம் மிகும் இந்தப் பூவில்
எந்த மேன்மைகள் எனக்கிருப்பினும்

திரண்ட செல்வம், உயர்ந்த கல்வி,
செல்வாக்குகள் மிக விருந்தாலும்
குருசை நோக்கிப் பார்க்க எனக்கு
உரிய பெருமை யாவும் அற்பமே.

உம் குருசே ஆசிக்கெல்லாம்
ஊற்றாம், வற்றா ஜீவ நதியாம்
துங்க இரத்த ஊற்றில் முழ்கித்
தூய்மையடைந்து மேன்மையாகினேன்

சென்னி, விலா, கை காலினின்று
சிந்துதோ துயரோடன்பு

மன்னா, இதைப் போன்ற காட்சி
எந்நாளிலுமே எங்கும் காணேன்.

இந்த விந்தை அன்புக் கீடாய்
என்ன காணிக்கை ஈந்திடுவேன்
எந்த அரும் பொருள் ஈடாகும்
என்னை முற்றிலும் உமக்களிக்கிறேன்

## 200. லேசான காரியம்

லேசான காரியம் உமக்கது லேசான காரியம்

பெலனுள்ளவன் பெலனற்றவன்
பெலனுள்ளவன் பெலனில்லாதவன்
யாராயிருந்தாலும் உதவிகள் செய்வது
லேசான காரியம் உமக்கது லேசான காரியம்

மண்ணை பிசைந்து மனிதனாய் மாற்றுவது.....
மண்ணான மனுவுக்கு மண்ணாவை தருவது.....

உயிரற்ற சடலத்தை உயிர்பெற செய்வது.....
தீராத நோய்களை வார்த்தையால் தீர்ப்பது.....

இடறிய மீனவனை சீக்ஷனாய் மாற்றுவது.....
இடையனை கோமகனாய் அரியனை ஏற்றுவது..

.